விலை: 30.00
பக்கங்கள் - 32
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 17 சனிக்கிழமை (01.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 226




## 7ஆம் விடுதி நோயாளிக்கு கொரோனா இல்லை

### தனிமைப்படுத்தப்பட்ட 76 பேரும் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)
கொரோனா தொற்று சந்தேகத்தில் தனிமைப் படுத்தப்பட்ட 76

32




## நீதியரசர் விக்னேஸ்வரனை
# கறுப்புச் சீருடையினர் பயமுறுத்தல்
### அஞ்சப் போவதில்லை என ஜனாதிபதிக்கு கடிதம்



(யாழ்ப்பாணம்)

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை கறுப்புச் சீருடை அணிந்த படையினர் பயமுறுத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் நீதியரசர் விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தான் எதற்கும் அஞ்சப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார். (31ஆம் பக்கம் பார்க்க)












பாராளுமன்றத் தேர்தல் - 2020

(யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்)

"மக்களின் ஆணையே எமக்குத் தேவை
மாற்றத்தைப் பெற்றுத்தருவது எமது பொறுப்பு"

டக்ளஸ் தேவானந்தா
(செயலாளர் நாயகம்-ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)



5



1

ஐயாத்துரை
ஸ்ரீரங்கேஸ்வரன்
(ரங்கன் தோழர்)

(பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர்/ கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாக செயலாளர்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி)

X

(C-217)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532





இரு
தேசம்
ஒரு நாடு
இதுவே
எமது
இலக்கு

சட்டத்தரணி
விஸ்வலிங்கம் மணிவண்ணன்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(C-206)

X 8



பாராளுமன்றத் தேர்தல்-2020
வன்னித் தேர்தல் தொகுதி

கனகையா
அழகேந்திரன்

உத்தரவு பெற்ற நில அளவையாளர்

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்



வன்னி
மண்ணின்
அபிவிருத்திக்காக
வெற்றி
இலக்கம்

3

X

1 2 3 4 5 6 7 8 9

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்



பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

X

மீனே எமது சின்னம்
தமிழர் மீட்சியே
எமது எண்ணம்



3

X 3

(C-202)

சுரேஷ் பிறேமச்சந்திரன்
(தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி
இணை ஊடகப் பேச்சாளர்)

VOTE

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி



ஜனநாயக
இடதுசாரி
முன்னணி

X

வன்னிக்கு தமிழ் அமைச்சரை உருவாக்குவோம்

வவுனியா மாவட்ட
வாக்காளர்களே

எமது அபிவிருத்திகளையும்
உரிமைகளையும்
வென்றெடுக்க







முன்னாள் பிரதி அமைச்சர்
தலைவர்
பிரபா கணேசன்

பாலன்

பி.வை.பிரசாத்

4 6 7

(C-212)

வாக்குச் சீட்டில் 12வது இடத்தில் உள்ள சுவர் கடிகார சின்னம்

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 17 சனிக்கிழமை (01.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 226

தோல்விக்குத் துணை சோர்வும், சோம்பலும்;
வெற்றிக்குத் துணை வீரமும், தீரமும்.
– அவ்வையார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மன்னா வேண்டாம் என்றொரு குரல் மன்னனைத் தடுக்கிறது...

மன்னன் சாலமனின் சபைக்கு ஒரு விசித்திரமான வழக்கு வருகிறது.

இரண்டு தாய். ஒரு குழந்தை. இருவரும் குழந்தை தமது என வாதிக்கின்றனர். அவர்களின் வாதம் மன்னன் சாலமனைக் குழப்புகிறது.

ஒரு தாய்க்கு இரண்டு குழந்தைகள் இருக்க முடியும். இரண்டு தாய்க்கு ஒரு குழந்தை எப்படிச் சாத்தியமாகும். மன்னன் சிந்திக்கின்றான்.

ஈற்றில் ஒரு முடிவுக்கு வந்த மன்னன் குழந்தையை ஆளுக்குப் பாதியாகக் கொடுப்போம் எனக் கூறி, தன் உடை வாளை எடுக்கின்றான்.

அந்நேரம் ஒரு குரல் மன்னா! வேண்டாம் என்று மன்னனைத் தடுக்கிறது. மன்னன் சாலமன் உண்மைத் தாய் யார் என்று இனங் கண்டு கொள்கிறான்.

அன்புக்குரிய தமிழ் மக்களே! இன்று ஒகஸ்ட் முதலாம் திகதி.

ஐந்தாம் திகதி பாராளுமன்றத் தேர்தல். மறுநாள் முடிவுகள் வெளியாகி இருக்கும்.

அந்நேரம் கிடைத்த முடிவுகளுக்கு நாம் விளக்கம் கொடுத்துக் கொண்டிருப்போம். கிடைத்த முடிவுகளுக்கு என்ன காரணம் என்று எங்கள் ஊடக ஆய்வாளர்கள் பதவுரை செய்வார்கள்.

அதுவரைக்குமே எங்களின் ஆர்வங்கள். அதன் பின்னர் வென்றவர்களே ஐந்து ஆண்டுகளுக்கு அதிபதிகளாவர்.

ஆக, ஒகஸ்ட் 5ஆம் திகதி நாம் வழங்குகின்ற புள்ளடிகள் தாம் எம் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்றன.

எனவே நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் நாம் யாரை ஆதரிக்கப் போகின்றோம் என்ற தீர்மானம் இங்கு மிகவும் முக்கியமானது.

தமிழ் மக்கள் எடுக்கக்கூடிய தீர்மானம் என்னவாக இருக்கும் என்பதை ஊகிப்பவர்கள் அந்தத் தீர்மானத்தை உடைக்கின்ற வகையில் பிரசாரம் செய்வர்.

அந்தப் பிரசாரம் செல்லுபடியாகும் துர்ப்பாக்கிய நிலைமைகளும் இல்லாமல் இல்லை.

எதுவாயினும் எம் தமிழ் மக்கள் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும். அதாவது மன்னன் சாலமன் எங்ஙனம் உண்மையான தாயை இனங்கண்டானோ, அதுபோல நாமும் நேர்மையான தமிழ்த் தலைமையை இனங் கண்டு அத்தகையவர்களை நம் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றுக்கு தெரிவு செய்வோம்.

### உங்கள் உரிமையை நிலை நாட்ட

# அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு



(கொழும்பு)

உங்களது உரிமைகளை நிலைநாட்ட அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவால் விடப்பட்ட விசேட அறிக்கையிலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இம்மாதம் 5ஆம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில்கொரோனா தொற்று அச்சம் காரணமாக மக்கள் வாக்களிப்பதற்கு தயங்குகிறார்கள் அல்லது பயப்படு கிறார்கள் என்ற நிலைமை காணப்படுகின்றது உண்மையில் மக்கள் இது தொடர்பில் அச்சப்படத் தேவையில்லை.

நாங்கள் வாக்களிப்பின் போது கொரோனா தொற்று தடுப்பிற்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம் எம்மைப் பொறுத்தவரைக்கும் ஏற்கெனவே சுகாதார நடைமுறைகளை பின்பற்றி எவ்வாறு வாக்களிப்பினை மேற்கொள்வது தொடர்பாக மாதிரி வாக் களிப்பினை பரீட்சித்துப் பார்த்திருக்கிறோம்.

31

# வரலாறு கற்றுத் தந்ததை கொண்டு சிந்தித்து வாக்களியுங்கள்

## தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் வரலாறு கற்றுத் தந்த அரசியல் முதிர்ச்சியைக் கருத்திற் கொண்டு சிந்தித்து வாக்களிக்குமாறு தமிழ் மக்கள்பேரவை கோரிக்கை

29

### உரிமைகளை வென்றெடுக்க

# அர்ப்பணத்தோடு இருக்கும் கட்சியைத் தெரிவு செய்க

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களின்உரிமைகளை வென்றெடுக்கும் அர்ப்பணத்தோடு இருக்கும் கட்சிகளைத் தெரிவு செய்யுங்கள் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தல்

31

### 5, 6ஆம் திகதிகளில்

## மதுச்சாலைகள் மூடப்படும்

(கொழும்பு)

இம்மாதம் 05 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு 05 ஆம் மற்றும் 06ஆம் திகதிகளில் நாட்டில் உள்ளஅனைத்து மதுபான

31

### ஆலயத்துக்கு சென்று

## வீடு திரும்பிய குடும்பஸ்தர் திடீர் மரணம்

(கரணவாய்)

ஆலயத்துக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய குடும் பஸ்தர் ஒருவர் திடீ

31

### மானிப்பாய் கட்டுடைப் பகுதியில்

## பற்றைக்குள் மறைந்திருந்த கொள்ளைக் கும்பல் சிக்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் இரவு வேளைகளில்வாள்களைக் காண்பித்து கொள்ளையில் ஈடுபடும் சம்பங்களுடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இருவர் தப்பி ஓடித்

31

### உரும்பிராயில்

## வீடு புகுந்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் வீட்டில் இருந்தவர்களை

31

# என் கனவு யாழ் 10 அம்சக் கொள்கைத் திட்டங்களும் 57 பரிந்துரைகளும்

## 01 அரசியல் தீர்விற்கான ஆணித்தரமான அழுத்தம்

- தமிழர்களை உள்ளடக்கிய செயற்திறன்மிக்க ஆட்சி
- அரசியல் யாப்பு சீர்திருத்தம்
- காணி விடுவிப்பும், மீள் குடியேற்றமும்
- தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை
- முன்னாள் போராளிகளின் வாழ்வியல் மேம்பாடு
- வலிந்து காணாமலாக்கப்பட்ட குடும்பங்களுடன் கைகோர்த்தல்

## 02 மீண்டும் கல்வியில் முதலிடம்

- தரமான மாணவர் மையக் கல்வி முறைமை
- கல்விசார் பௌதீக, ஆளணி வளங்களின் இடைவெளியை நிரப்பல்
- நவீன தொழில்நுட்பத்தினூடாக பாடசாலைக் கல்வியின் புத்தெழுச்சி
- இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை
- திறன் விருத்தி சார் தொழிற்கல்வி அறிமுகம்
- சமூகப் பொறுப்புள்ள மாணவர்களை உருவாக்கல்

## 03 துரித பொருளாதார வளர்ச்சி

- "MAKE IN JAFFNA" செயற்திட்டம்
- "தாயகத்தை வளமாக்குவோம்" முதலீட்டுத் திட்டம்
- தற்சார்பு பொருளாதாரம்
- உற்பத்தி, ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு முன்னுரிமை
- சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களை வலுவூட்டல்
- துரித சுற்றுலாத்துறையின் வளர்ச்சி

## 04 விவசாயம், மீன்பிடி, கால்நடைத் துறைகளில் துரித மீளெழுச்சி

- உணவு உற்பத்தியும், பாதுகாப்பும்
- நீலப்புரட்சி
- விவசாயத் தொழில்மயமாக்கம்
- விவசாய தொழில் முனைவோர்களை உருவாக்கல்
- ஸ்மார்ட், டிஜிட்டல் விவசாயம்
- நிலையான விவசாயச் சுற்றுச்சூழல் அமைப்பு

## 05 மொழி, கலை, கலாச்சார, பண்பாட்டு, இலக்கியப் புத்தாக்கம்

- வழக்கொழிந்த பாரம்பரியக கலைகள் மீளுருவாக்கம்
- போதையற்ற சமுதாயம்
- உலகின் மூத்த மொழி, செம்மொழியான தமிழ் மொழி விருத்தி
- தமிழ் இலக்கிய வட்ட விருத்தி
- வன்முறையற்ற சமுதாயம்
- தமிழ்க் கலாச்சாரத் தொல்பொருள் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்

## 06 அனைத்து தமிழ் உறவுகளையும் ஒரே புள்ளியில் இணைத்தல்

- உலகத்தமிழர் - இணைப்புப்பாலம்
- உலகத்தமிழர் - அறிவுப்பாலம்
- உலகத்தமிழர் - உறவுப்பாலம்

## 07 உடல், உள நலன்மிக்க ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கல்

- நோயெதிர்ப்பாற்றல் மிக்க பிரஜைகள்
- சித்த ஆயுர்வேத மருத்துவம்
- ஆரோக்கியமான சமூகம்
- தன்னிறைவு ஆங்கில மருத்துவம்
- நஞ்சில்லா உணவு உற்பத்தி
- கொரோனாவிற்குப் பின்னரான வாழ்வு (Post COVID-19 Life)

## 08 தொழில்நுட்பத்தை மையப்படுத்திய சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல்

- டிஜிட்டல் சேவைகள் (Digital Services)
- டிஜிட்டல் தரவுத்தளம் (Digital Knowledge Base)
- டிஜிட்டல் வேலைவாய்ப்பு வங்கி (Digital Job Bank)
- டிஜிட்டல் கட்டணம் (Digital Payment)
- டிஜிட்டல் ஆளுகை (Digital Governance)
- ஸ்டார்ட் அப் யாழ் (Startup Yarl)

## 09 அறிவுபூர்வமான, சக்திமிக்க மகளிர், இளைஞர்களின் எதிர்காலம்

- மகளிர் வலுவூட்டல்
- இளம் விவசாயிகளை உருவாக்கல்
- இளையோரின் திறனாற்றல் அபிவிருத்தி
- இளம் தொழில் முயற்சியாளர்களின் தேடல்
- விளையாட்டில் முதலிடம்

## 10 இயற்கை, பௌதீக, ஆளணி வளங்களை மேம்படுத்தல்

- நிறைவான கிராம அபிவிருத்தி
- சூழலியல் சுற்றுலாத்துறையின் அறிமுகம்
- அனைவருக்கும் வீடு, குடிநீர், மின்சாரம்
- பேண்தகு சூழல் முகாமைத்துவம்
- அபிவிருத்தி இடைவெளியை நிரப்பல்
- மீள் புதுப்பிக்கத்தக்க வள மேம்பாடு



"என் கனவு யாழ்" திறன் செயலியை தரவிறக்கம் செய்ய

Download on the App Store

GET IT ON Google Play

மேலதிக தகவல்களுக்கு விரையுங்கள்

www.enkanavuyarl.lk

என் கனவு யாழ்

✋ ✕ 1 அங்கஜன் இராமநாதன்

அங்கஜன் இராமநாதனின் "என் கனவு யாழ்"

# செயல்திட்ட வரைவு

(C-198)

## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2020



யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

6 தமிழ் மக்கள் தேசிய கூட்டணி



8

திருமதி மீரா அருள்நேசன்

(தமிழ் மீரா)

 X

(C-201)

ஆசிரியையாய் மாணாக்கருக்கு
நல் அரசியல்வாதியாய் மக்களுக்கு


### தேர்தல் கண்காணிப்பில் அரச புலனாய்வுப் பிரிவினர்

(கொழும்பு)

தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை கண்காணிப்பதற்காக அரச புலனாய்வு துறையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய இதனை தெரிவித்துள்ளார்.

தேர்தல் குறித்த முறைப்பாடுகள் பக்கச் சார்பின்றி விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பில் அரச புலனாய்வு துறையினர் ஆராயவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)


## பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்.மாவட்டம்

"இரண்டு தேசங்கள் ஒரு நாடு"





நடராஜர் காண்டீபன்

(சட்டத்தரணி)

சட்ட ஆலோசகர்,

தமிழ் தேசிய மக்கள் முன்னணி

(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)



 X 2 4 10

(C-197)

தாயகம் - தேசியம் - சுய நிர்ணய உரிமை


## ரயில் மார்க்கத்தை விரிவுபடுத்த தீர்மானம்

(கொழும்பு)

மாத்தறை முதல் பெலியத்தை வரையிலின் தற் போது நிர்மாணிக்கப்பட்டு வரும் ரயில் மார்க்கத்தை, அம்பாந்தோட்டை வரை விரிவுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே, இந்த விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது. இதன்படி, இந்தத் தீர்மானத்தின் ஊடாக பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்கு ரயில் சேவையில் ஏற்படும் நெருக்கடிகளை கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்ப்பதாக, போக்குவரத்து அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ஐ-4)


## பாராளுமன்றத் தேர்தல் - 2020

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்



1 அங்கஜன் இராமநாதன்
BSc.(Eng), MBA (International)

எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!
எனது அன்புக்குரிய வர்த்தகப் பெருமக்களே!

**நான் ஒரு வர்த்தகராக இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய காரணம்**

- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் வடபகுதி மக்கள் பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் மூலமாக எமது தேசத்தைக் கைப்பற்றியதன்மூலம் பல்லாயிரம் கோடி ரூபாய்களை எமது தேசம் இழந்து நிற்கின்றது.
- இறுதி யுத்தத்தை முள்ளிவாய்க்கால் வரைகொண்டு சென்று,பல்லாயிரம் உயிர்களை இழந்து நிற்கும் எமது சமூகத்திற்கு ஒரு தீர்வைக் கொடுக்கவேண்டிய கட்சியாக இந்தக் கட்சி இருக்கின்றது.
- எமது தேசத்தில் காணாமல் போனோர் மற்றும் யாழ்.குடாநாட்டில் 2006 தொடக்கம் 2009 காலப்பகுதியில் சுட்டுக்கொலை செய்யப்பட்டவர்கள் விபரங்களைத் திரட்டி அதற்கொரு ஆணைக்குழுவை அமைத்து,விசாரணை செய்யப்பட வேண்டும்.
- தமிழீழ வைப்பகத்தில் வைப்பிலிடப்பட்ட பல்லாயிரம் கோடி தங்க நகைகளை மீளளித்தல் அல்லதுஅதற்குரிய நட்டஈட்டை அரசு வழங்கவேண்டும்.
- மயிலிட்டித்துறைமுகத்தை அப்பகுதியைச் சார்ந்த கடற்றொழிலாளர் சமுதாயத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
- இராணுவத்தால் அபகரித்து வைத்திருக்கும் தனியார் காணிகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
- அடுத்த ஐந்துஆண்டுகளுக்கு முற்று முழுதான அபிவிருத்தித் திட்டம் கொண்டுவரப்படல் வேண்டும்.
- எங்கள் பிரதேசத்தில் இருக்கும் அனைத்து வர்த்தகர்களின் ஒற்றுமையுடன் பங்குதாரர்களாக பல நிறுவனங்களை ஆரம்பித்து, 4 வீத வட்டிகடன் 20 ஆண்டு கால அடிப்படையில் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பைக்கொண்ட பல தொழிற்சாலைகளை அமைத்து, இளைஞர்கள்,யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கவேண்டும்.
- இவைகள் யாவற்றையும் நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்புக் கூறவேண்டிய இந்தக் கட்சியிலேயே எங்களுக்கு கிடைக்க வேண்டிய சகல உரிமைகளையும் முதலீடுகளையும் அழிவுகளுக்குக் கிடைக்கவேண்டிய நட்டஈடுகளையும் நாடாளுமன்றத்தில் பேசிப் பெறுவதற்காகவே எனக்கு உங்கள் வாக்குகளை அளிக்குமாறு தயவாக வேண்டி நிற்கின்றேன்.
- என் அன்பான வர்த்தக மற்றும் வாக்காளப் பெருமக்களே! தற்போதைய சூழலில் உங்கள் அனைவரையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்காததையிட்டு மனம் வருந்துகின்றேன்.தேர்தல் முடிந்தபின் 60 நாள்கள் நான் இந்த மாவட்டத்திலே தங்கியிருந்து உங்கள் எல்லோரையும் சந்தித்து, உங்கள் பிரச்சினைகள், தேவைகள் பற்றிய சகல விபரங்களையும் அறிந்து நாடாளுமன்றத்துக்குக் கொண்டுசென்று, அதற்குரிய தீர்வை எடுப்பேன் என்றும் உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.

கைசின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் வெற்றி இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!

ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப் போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் வடமாகாணத்தில் பாரிய அபிவிருத்தியை மேற்கொண்டு, வேலையில்லாப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை.



பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

"உங்கள் வாக்கு உங்கள் உரிமை
சரியான முறையில் வாக்களியுங்கள்!"

 X 5

தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.

facebook.com/vinnan05

(C-204)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BIDS

## Supply of Skilled, Semiskilled and Unskilled Workers to the University of Jaffna - 2020/2021

1. The Chairman, Procurement Committee, University of Jaffna invites sealed Bids for the above contract up to 2.00 p.m. on **24th August 2020.**

2. Period of contract should be 365/6 days subject to a performance evaluation period of 60 days.

3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.

   3.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.

   3.2 Average of annual volume of supply of skilled, semiskilled and unskilled workers contracts performed in the last 3 years should be at least **Rs. 60 Million**

   3.3 Must have satisfactorily carried out at least one supply of skilled, semiskilled and unskilled workers contract to a Government Department/ Corporation/ University during the last 3 years for not less than **Rs. 20 Million.**

   3.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least 30.

4. Interested bidders may obtain further information from Deputy Registrar, General Administration, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day during working hours.
   Contact numbers: - Tele: 021 2226517, Fax:- 021 2226517.

5. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Deputy Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **20th August, 2020** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of Rs. **2500.00.** The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **People's Bank, University of Jaffna Branch Account Number 162-1-001-6-0000880** at any Branch of People's Bank in Island wide.

6. Bidders are strongly advised to attend the **Pre-bid meeting on 17th August 2020 at 10.00 am** in the board room of the University of Jaffna and visit each location before pricing.

7. Bids shall be delivered or sent by registered post to the Deputy Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs on or before 24th August 2020 or** be deposited in the tender box kept in the Office of the Registrar on or before the above date and time. Bids will be opened soon after closing the Bids in the presence of the bidders' representatives who choose to attend

8. Bids shall be Valid for a period of 91 Days (should be as at 22nd November 2020) from the date fixed for closing of Bids or any extended period.

9. All Bids shall be accompanied by a Bid security for and which shall be;

   - In the form included with the Bidding document
   - In favour of Competent Authority, University of Jaffna
   - For an amount of Rs. 50,000.00 Valid up to 21st December 2020 (120 days from the date of closing of bid)
   - Issued by one of the agencies
     a. A bank operating in Sri Lanka;
     b. A bank based in another country but the guarantee "confirmed" by a bank operating in Sri Lanka;

**Chairman,**
**Procurement Committee,**
**University of Jaffna**


# முகநூலில் வீரவசனம் பேசுபவர்கள் போராளிகள் அல்லர்- கருணா

(கொழும்பு)

முகநூலில் வீரவசனம் பேசுபவர்கள் போராளிகள் அல்லர்.

அவர்கள் எதுவித போராட்டங்களிலும் பங்கெடுக்காதவர்கள் என கருணா அம்மான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை நற்பிட்டிமுனைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், அம்பாறை மாவட்டத்தில் எனது வெற்றி உறுதிசெய்யப்பட்டுவிட்டது.

முகநூலில் வீரவசனம் பேசுபவர்கள் போராளிகள் அல்லர்.

அவர்கள் எதுவித போராட்டங்களிலும் பங்கெடுக்காதவர்கள். அம்பாறை மாவட்ட மக்கள் தேர்தலில் வாக்களிப்பவர்களில் அனுபவம் உள்ளவர்கள். எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம் என்ற கருத்திற்கமைய நாம் வென்று கொண்டு தான் இருக்கின்றோம். மக்கள் யார் பக்கம் என்று எதிர்வரும் தினங்களில் உறுதியாகும்" என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# ஐக்கிய மக்கள் சக்திக்கு பேரிடி மேலும் 37 பேர் கட்சியிலிருந்து நீக்கம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக வேட்புமனுக்களை தாக்கல் செய்த உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 37 பேர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பாக வேட்புமனுத் தாக்கல் செய்த 54 ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்காத உள்ளூராட்சி அமைப்புகளின் 61 உறுப் பினர்கள் கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் பிரபல
அச்சகத்திற்கு அனுபவமுள்ள
புத்தகம் கட்டுனர் (**Binding**)
வெல்டர் (**Welder**) தேவை!
**ஆண் / பெண் இருபாலார்**
(புத்தகம் கட்டுனர் பெண்கள் விரும்பத்தக்கது)
**076 1923 444 / 077 4821 912**
(3451)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2
கி.பா: 18 1/2 செவ் 7 இல் உயரம்: 5'10"
தகைமை/தொழில்: **B.E Mechanical Engineering. Mechanical Engineer.**
எதிர்பார்ப்பு: பட்டதாரி. பொறியியலாளர், கணக்காளர், வங்கி உத்தியோகத்தர் போன்ற உத்தியோகத்தர்
தொ.இ: **B/11021**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: 24 செவ் 9 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. தனியார் வேலை (ஜேர்மன்)
எதிர்பார்ப்பு: ஜேர்மன் விசா உள்ள பெண் மணமகன் விவாகரத்தானவர். விவாகரத்தும் ஏற்கப்படும்
தொ.இ: **B/11097**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 0.05 1/4 செவ் 9 இல் உயரம்: 5'10"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. வியாபாரம்.
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: **B/11094**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: செவ் 4 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: **B.Sc, M.Sc.(London),** சந்தைப்படுத்தல் பணிப்பாளர் (லண்டன்)
எதிர்பார்ப்பு: தகுந்த பெண். மணமகன் விவாகரத்தானவர்
தொ.இ: **B/11093**

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 கிறிஸ்தவம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: **M.Sc in Computer Science , B.Sc in IT, MBA, IT Lecturer**
எதிர்பார்ப்பு: தகுந்த வரன். கொழும்பு விரும்பத்தக்கது
தொ.இ: **G/11027**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 33 செவ் 3 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.தனியார் தற்காலிக வேலை
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: **G/11028**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: செவ் 12 இல் உயரம்: 5'1"
தகைமை/தொழில்: **Degree in Human Resourses &MBA. Human Resourses Executive (Private)**
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: **G/11029**

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா: சூரி. செவ் 12 இல் உயரம்: 4'9"
தகைமை/தொழில்:க.பொ.த.உ.த. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: தகுந்த வரன். விவாகரத்தானவர்களும் ஏற்கப்படும்.
தொ.இ: **G/11031**

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பாடசாலை மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்படும் புதிய நடைமுறை



(கொழும்பு)

அனைத்து பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு பாடசாலை காலத்திற்கான மாணவர் அடையாள இலக்கத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வியமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தற்போது பாடசாலைகளில் கல்வி பயிலும் 43 லட்சம் மாணவ, மாணவிகளில் 39 லட்சம் பேரின் தகவல்கள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன.

மீதமுள்ள 4 லட்சம் மாணவர்களின் தகவல்களை துரிதமாக கணனி மயப்படுத்திய பின்னர், இந்த நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

கல்வியமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

மாணவர்களுக்கு அடையாள இலக்கம் வழங்கப்பட்ட பின்னர், மாணவர்கள், அந்த இலக்கத்தை 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தரம், உயர்தரப் பரீட்சைகள், விளையாட்டு உட்பட ஏனைய திறமைசார் போட்டிகளுக்கு பயன்படுத்த முடியும்.

தற்போதுள்ள மாணவ, மாணவிகளுக்கு அடையாள இலக்கங்கள் வழங்கப்பட்ட பின்னர், அடுத்த ஆண்டு முதல் மாணவர்களை பாடசாலைகளுக்கு சேர்க்கும் போது அடையாள இலக்கங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# லங்காபுரவில் 300 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன

(பொலநறுவை)

பொலநறுவை லங்காபுர பிரதேசத்தில் 1000 பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்வதற்கான உபகரணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

லங்காபுர பிரதேச செயலக உத்தியோகத்தர் ஒருவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

இதையடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 300 இற்கும் அதிகமான குடும்பங்கள் அங்கு தனிமைப்படுத்தப்பட்டன.

அத்துடன், அவருடன் நெருங்கிப் பழகிய பலர் பொலநறுவை, ஹிங்குராங்கொட பகுதிகளில் உள்ளதாகவும், அவர்களை அடையாளம் காணும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# இராஜாங்கனை பகுதிக்கான பயணக் கட்டுப்பாடுகள் நீக்கம்

(கொழும்பு)

கொவிட் - 19 தொற்று காரணமாக அநுராதபுரம் இராஜாங்கனை பகுதிக்குள் அமுல்படுத்தப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகளானது நேற்று முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இருந்து பல புதிய கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட்டமையினால் இராஜாங்கனை பகுதிக்கு பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

எனினும் கடந்த 19 ஆம் திகதி முதல் இதுவரை இந்த பிரதேசங்களில் எந்தவொரு தொற்று நோயாளரும் இனங் காணப்படவில்லை. இராஜாங்கனை பிரதேசத்தில் கொவிட் 19 தொற்று பரவல் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை கருத்திற்கொண்டே சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைவாக பயணக்கட்டுப்பாடுகள் நேற்றுக் காலை முதல் முற்றாக நீக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

# கடல்நீர் தரைக்கு வரும் ஆபத்து பொது மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கடற்பரப்பில் கடல் கொந்தளிப்பாக உள்ளமையினால் கடல்நீர் தரைக்கு வரும் ஆபத்து உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

பேருவளையில் இருந்து காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்பில் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட பிரதேசங்களில் கடலுக்கு அருகில் வாழும் மக்கள் மிகுந்த அவதானமாக செயற்படுமாறு பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் மழையுடன் கூடிய காலநிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய சப்ரகமுவ, மேல் மற்றும் மத்திய மாகாணத்திலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை பெய்யும்.

மேல் மாகாணத்திலும், ஊவா மாகாணத்திலும் மாலை அல்லது இரவில் மழை பெய்யக்கூடும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தெற்கிலும் பொலநறுவை, மன்னார், மாத்தளை, மாவட்டத்திலும் மத்திய மாகாணத்திலும் மணிக்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)



யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கட வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நேற்று வரலக்ஷ்மி நோன்பும் காப்புக்கட்டுதலும் சுகாதார முறைப்படி இடம்பெற்றது.
(படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# யாழ்.போதனா வைத்தியசாலையின் 7 ஆம் விடுதியில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் சுய தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் 7 ஆம் இலக்க விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அந்த விடுதியில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் அனைவரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர் 7 ஆம் இலக்க விடுதியின் மலசலகூடத்தைப் பயன்படுத்தியமை மற்றும் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றிருந்த நிலையில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் வட மாகாணம் மற்றும் வெளி மாகாணங்களைச் சேர்ந்த சுமார் 70 பேர் அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சவுதி அரேபியாவிலிருந்து கடந்த 7 ஆம் திகதி நாடு திரும்பிய ஒருவர் விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு சுவாசக் கோளாறு ஏற்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு 7 ஆம் இலக்க விடுதியில் சிகிச்சை பெற்றார். கடந்த 25 ஆம் திகதி வரை அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் அவர் விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு மீண்டும் அனுப்பப்பட்டுள்ளார். அவருக்கு கொரோனாத் தொற்று கடந்த திங்கட்கிழமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை 7 ஆம் இலக்க விடுதியில் பணியாற்றும் மருத்துவ சேவையாளர்கள் நால்வர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதனால் ஆபத்தை முன்கூட்டியே தடுக்கும் வகையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 7 ஆம் இலக்க விடுதியில் ஜூலை 22 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதிவரை சிகிச்சை பெற்ற நோயாளிகள் அனைவரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதார குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் அவர்களைக் கண்டறிந்து சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் பணி நேற்று முன்தினம் மாலை ஆரம்பிக்கப்பட்டது.

வடமாகாணம், பொலநறுவை மற்றும் குருநாகல் ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் 70 பேர் நேற்று முன்தினம் தொடக்கம் அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.


அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை அவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 10 தொடக்கம் 14 நாட்களுக்கிடையில் செய்யப்படும் என வட மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (5-8)

# டக்ளஸின் முயற்சியால் வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் வலி.தெற்கு பகுதியிலுள்ள நீதவான் நலன்புரி நிலையத்தில் பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவந்த சுமார் 70 குடும்பங்களுக்கு கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் குறித்த பயனாளிகளின் சொந்த இடங்களில் வீடுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மயிலிட்டி தையிட்டிப் பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்கள் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தனர். அவர்களில் ஒரு தொகுதி மக்கள் கடந்த 30 ஆண்டுகளாக வலி



காமம் தெற்கு நீதவான் நலன்புரி நிலையில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பெரும் அவலங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இவர்களது வாழ்வாதார தேவைகளுக்காக அக்காலப்பகுதியில் பல தேவைப்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்றுக்கொடுத்து வந்திருந்த போதிலும் அம் மக்களுக்கு நிரந்தரமான வீடுகளை, அமைத்துக் கொடுப்பதற்கு அவர்களது காணி நிலங்கள் விடுவிக்கப்படாத நிலைமையால் தடைப்பட்டு வந்தது.

இந்நிலையில் தற்போது அவர்களது நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதை அடுத்து குறித்த நலன்புரி முகாமில் தங்கியிருந்த சுமார் 70 குடும்பங்களுக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டிருந்தார். இதையடுத்தே குறித்த வீடுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று கட்சியின் யாழ்.மாவட்ட நிர்வாக செயலாளர் சிவகுரு பால கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (4-5)

# தேர்தல் விதிமுறை மீறல்
## 5 பேர் கைது;வாகனம் பறிமுதல்



(கரணவாய்)

தேர்தல் விதிமுறைகளை மீறி பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கட்சி ஆதரவாளர்கள் ஐவர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம்தேர்தல் விதிமுறைகளை மீறியதாக தெரிவித்து வாகனம் ஒன்றை நெல்லியடி பொலிஸார் கைப்பற்றியதுடன் அதில் இருந்த 5 பேரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் வாகனம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. பருத்தித்துறை நீதிமன்றத்தில் வாகனம் பாரப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார்தெரிவித்தனர்.(4-5-60)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக்கழகம் மற்றும் அரச சிறுவர் நாடக ஆலோசனைக் குழு ஆகியன ஒன்றிணைந்து நடத்தும் அரச சிறுவர் நாடக விழாவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் பாடசாலைகள், கலை மன்றங்கள், ஆர்வமுடைய கலைஞர்கள் பங்கு பற்றமுடியும்.

எனவே இதில் பங்கு பற்ற [redacted]புபவர்கள் காரைநகர் [redacted]ச கலாசாரப் பிரிவில் [redacted]ணப்பப் படிவம் மற்றும் [redacted]நிருபம் என்பவற்றைப் பெற்று எதிர்வரும் 09.09.2020 ஆம் திகதிக்கு முன்னர் தங்களின் விண்ணப்பப் படிவம் மற்றும் மூன்று நாடகப் பிரதிகளையும் கலாசாரப் பிரிவில் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளர் மரியதாசன் ஜெகூ அறிவித்துள்ளார். (5)

# சுழற்சி முறையில் வகுப்புகள்

(நெளுக்குளம்)

கொரோனா காலத்தில் பாடசாலைகள் பின்பற்ற வேண்டிய சமூக இடைவெளி, கைகழுவுதல், வகுப்பில் மாணவர்களுக்கிடையே ஒரு மீற்றர் தூர இடைவெளி, முகக்கவசம் அணிவது உட்பட 45 நடைமுறைகள் உள்ளடக்கிய சமூகப்பாதுகாப்புடன் பாடசாலைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளது. நேற்று வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் பெற்றோர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த.உயர்தரம் மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைகள் இடம்பெறவுள்ள வகுப்புக்கள் மட்டும் ஆரம்பிக்கப்பட்டபோதும் மாணவர்களின் வருகை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள தரம் 6 வகுப்புக்கள் வாரத்தில் ஒரு நாள் மட்டும் இடம்பெறவுள்ளது. ஏனைய வகுப்புக்களும் சுழற்சி முறையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதற்காக மாணவர்கள் உட்பட பெற்றோர்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் உள்ளடங்கிய கையேடுகள் பெற்றோருக்கு வழங்கப்பட்டன.

விடுமுறை காலத்தில் வலயக்கல்வி அலுவலகத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட செயலட்டைகளை மாணவர்கள் பின்பற்றி பாடசாலை ஆரம்பிக்கும்போது மாணவர்கள் வகுப்பு ஆசிரியரிடம் ஒப்படைக்குமாறும் அதன் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் பெற்றோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அறிவுறுத்தப்பட்டன. (4-5-299)


35 ஆண்டுகளாக
விலை போகாத
ஒரே தலைமை!
X
4
ஈ. சரவணபவன்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உதயன் குழுமத் தலைவர்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(062)

# தமிழர்கள் ஒன்றுபட்ட தேசிய இனமாக எழுச்சி பெறும் தருணம் இதுவே



## -சுரேந்திரன்-

(யாழ்ப்பாணம்)

ஒடுக்கப்பட்ட, அதிகாரம் அற்ற இனமாக தமிழினம் தனது பூர்வீக நாட்டில் குடிப் பரம்பல் சிதைக்கப்பட்டு தற்போது தமிழர்கள் செறிந்து வாழுகின்ற தமது பூர்வீக மண்ணான வடக்கு- கிழக்கிலும் அதற்கான நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் நாம் அனைவரும் ஒற்றுமையாக ஒன்றுபட்ட ஒரு தேசிய இனமாக எழுச்சி பெறாவிட்டால் பத்து ஆண்டுகளுக்குள் எமது இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுவிடும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ். கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் குருசுவாமி சுரேந்திரன் ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தனக்கான நீண்ட வரலாறு, நிலப்பரப்பு, தாய்மொழி, தனித்துவமான கலாசாரம் பண்பாடு, பொருளாதார கட்டமைப்பு, உள்ளிட்டவற்றை கொண்ட இனமே தன்னை ஒரு தேசிய இனமாக அடையாளப்படுத்தி சுயநிர்ணய உரிமையை கோர முடியும் என்ற நிலையில், மிக முக்கியமாக கருதப்படும் எமது நிலப்பரப்பையும் எமது பிரதிநிதித்துவத்தையும் இல்லாமல் செய்யும் அல்லது குறைக்கும் நடவடிக்கைகளை பேரினவாதிகள் மெல்ல மெல்ல நகர்த்திவந்ததன் விளைவாக தமிழர்களின் பூர்வீக நிலங்களான திருகோணமலை , அம்பாறை போன்ற மாவட்டங்களை பறிகொடுக்கும் நிலைக்கு இன்று நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

தற்போதே நாம் விழிப்புற்று எமது பலத்தை ஒன்று திரட்டி சரியான மக்கள் பிரதிநிதித்துவத்தை உருவாக்க தவறி பேரினவாத அரசாங்கத்தின் முகவர்களாக செயற்படுபவர்களையும், தேசிய கட்சிகளில் எமது தேசத்தை தாரைவார்க்க வருபவர்களையும், எமது பலத்தை உடைப்பதற்காக எம்மிலிருந்து பிரிந்து சென்று உதிரிகளாக செயற்படுபவர்களையும் தெரிவுசெய்யும் பட்சத்தில் எமக்கிருக்கின்ற சொற்ப உரிமைகளையும் இழக்கவேண்டிய நிலை ஏற்படலாம்.

தேசிய கட்சிகளில் போட்டியிட்டு வெற்றிபெறும் தமிழ் உறுப்பினர்களுக்கு வரப்பிரசாதங்களை வழங்கி அவர்களை வைத்தே எம்மை பலவீனப்படுத்தி குடியேற்றங்களை ஏற்படுத்தி இனப்பரம்பலை சிதைத்து எமது உரிமைக் கோரிக்கையை வலுவற்றதாக்கும் திட்டத்திற்கு நாம் வழியமைத்துவிடக் கூடாது.

இந்த நேரத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நாம் ஒரு பலமான தேசிய இனம் என்பதை வெளிப்படுத்துவதற்கு சர்வதேசமும் தென்னிலங்கையும் தமிழர்களின் பிரதிநிகளாக கருதும் அல்லது ஏற்றுக்கொள்ளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் வெற்றி அவசியமாகின்றது.

இதன்மூலம் எமது உரிமைக் கோரிக்கைகளை வலுப்படுத்துவதுடன் எமது தொடர்ச்சியான இருப்புக்காக தற்சார்பு பொருளாதார திட்டங்களையும் செயற்படுத்தி நாம் எவரிலும் தங்கியிருக்காத தனித்துவமான இனமாக எம்மை அடையாளப்படுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# பாராளுமன்றத் தேர்தல் மாற்றுத் தலைமைக்கான ஆணை

## -விக்னேஸ் குலரட்ணம்-



(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்றத் தேர்தலானது தென் பகுதியின் அரசியல் மாற்றத்திற்கான ஆணையாக அமைய இருக்கின்றது என்பது இலங்கை வாழ் மக்கள் அனைவரும் அறிந்த ஒரு விடயம் ஆகும்.

அந்த வகையில் தமிழர்கள் அதிகளவில் செறிந்து வாழும் வடக்கு-கிழக்கு பகுதிகளில் இந்த தேர்தல் ஆனது மக்கள் தங்களுடைய மாற்றுத்தலைமைக்கான ஆணையை வழங்குகின்ற ஓர் சந்தர்ப்பமாகவே பார்க்கப்படுகின்றது.

மிக முக்கியமாக மக்கள் மாற்றுத் தலைமையை எவ்வாறு தேர்ந்தெடுக்கப் போகின்றார்கள்.

அந்த மாற்றுத் தலைமை யார்? என்கின்ற கேள்விகளுக்கு பதிலாகவே இந்த தேர்தலின் முடிவுகள் அமையப் பெறப் போகின்றன என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் விக்னேஸ் குலரட்ணம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

எங்களினுடைய நீண்ட யதார்த்தமான அரசியல் கொள்கையானது தேசிய நல்லிணக்கத்திற்கூடாக தேசிய அரசியல் நீரோட்டத்திலே இணைந்து ஓர் இணக்க அரசியலை உருவாக்குவதன் மூலம் மக்களினுடைய அரசியல் பிரச்சினைக்கான தீர்வாக இருந்தாலென்ன, தமிழர் பிரதேசத்தினுடைய அபிவிருத்தியாக இருந்தாலென்ன, மக்களினுடைய அன்றாடப் பிரச்சினைகளாக இருந்தாலென்ன, இவற்றையெல்லாம் தீர்த்துக்கொள்ளலாம் என்கின்ற விடயத்தை பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றோம்.

ஏனைய கட்சிகளில் இருந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி எவ்விதமாக வேறுபடுகின்றது என்றால் ஏனையவை இன, மத முரண்பாடுகளை உட்புகுத்தி முரணான அரசியல் கொள்கைகளை முன்னிறுத்தியே மக்களிடம் வாக்குகளை கேட்கின்றன.

ஆனால் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியானது அதன் 25 வருட கால அரசியல் பயணத்தில் மிக நிதானமாக தேசிய நல்லிணக்கத்தின் மூலமே சாதிக்க முடியும் என்கின்ற நம்பிக்கையினை வலியுறுத்தி வந்துள்ளது.

தமிழர் பிரதேசங்கள் பொருளாதார ரீதியிலே மிகவும் பாதிப்படைந்து காணப்படுகின்றன. அந்தப் பிரதேசங்களிலே அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கான சூழல் தொடர்பில் ஆராய வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம்.

அதனை விடுத்து காலத்தை கடத்துவதற்காகவும் அரசியல் இருப்புக்களை தக்க வைத்து கொள்வதற்காகவும் மத்தியில் இருக்கும் அரசாங்கம் ஏற்க மறுக்கும் கொள்கைகளை முதன்மைப்படுத்திக் கதைப்பதும், மக்கள் மத்தியிலே இனத்துவேசமான கருத்துக்களை முன்வைத்து வாக்குகளை பெற முயல்வதும் சுயலாப அரசியலின் வெளிப்பாடாகும்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் கோணம் முற்றுமுழுதாக வேறுபட்டதாகவும் யதார்த்தமானதாகவும் இருக்கின்றது என்பதே உண்மையாகும்.

எதிர்காலத்திலே ஏனைய தமிழ் அரசியல் தலைமைகள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியோடு அணி திரண்டு பயணிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக உருவாக்கப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

பாராளுமன்றத் தேர்தல் -2020



வேலணை பிரதேச செயலகப் பிரிவில் சமூக சேவைகள் உத்தியோகத்தராக பணியாற்றி பெரும் சேவைகள் புரிந்தவர்

வேதநாயகம் தபேந்திரன்

B.Com (Jaf), PGD.PDS (Jaf), M.A(Jaf)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி

9 X 9

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களே!
எங்கள் சேவையாளனின் அரசியல் பிரவேசத்திற்கு
ஆதரவை வழங்குங்கள். வெற்றியடையச் செய்யுங்கள்.

(058) வேலணை பிரதேச செயலகப் பிரிவின் நலன்விரும்பிகள்

# மின்சார பாவனையாளர்களுக்கு மூன்று பில்லியன் ரூபாய் சலுகை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அனைத்து மின்சாரப் பாவனையாளர்களுக்கும் 3 பில்லியன் ரூபாய் சலுகை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நுகர்வுக்கு உட்படுத்திய மின்சார பாவனைக்கே இவ்வாறு சலுகை வழங்கப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

67 இலட்சம் மின் பாவனையாளர்களுக்கு இந்த சலுகை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பெப்ரவரி மாதம் வழங்கப்பட்டுள்ள கட்டண பட்டியலுக்கு அமைய அடுத்த மூன்று மாதங்களுக்கு செலுத்த முடியுமெனவும் இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது. (ஜ-4)

# 47 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

ஜப்பான் மற்றும் கட்டாரில் வேலைக்காக சென்ற 47 இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர்.

இருவேறு விமானங்கள் ஊடாக குறித்த குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இவர்கள் அனைவரும் நாடு திரும்பியுள்ளனர். கட்டாரில் இருந்து வருகை தந்தவர்கள் அந்நாட்டு கடற்படையில் சேவையாற்றும் 41 இலங்கையர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து குறித்த அனைவரும் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளானவர்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்போம்



(கொழும்பு)

நாங்கள் வெற்றி பெற்று முதல் ஆறுமாத காலத்திற்குள் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளானவர்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மகரகம பகுதியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.


எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சிறந்த வெற்றியை பெற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது.

எமது ஆட்சியில் கிராம இராச்சியம், நகர இராச்சியம் செயற்றிட்டத்தின் ஊடாக நாட்டின் அனைத்து பகுதிகளையும் அபிவிருத்தியடையச் செய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

பாராளுமன்றத் தேர்தல் - 2020
வன்னித் தேர்தல் மாவட்டம்
வடிவேலு
இராசரத்தினம்
(ஓய்வுநிலை பொறியியலாளர்)

8
தமிழ் மக்கள் தேசிய கூட்டணி
(088)
தன்னாட்சி - தற்சார்பு - தன்னிறைவு

## பொதுத் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)


நாட்டில் கொரோனா நோயாளர்கள் அதிகரித்துச் செல்வதை கருத்தில் கொள்ளாது தேர்தல் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கந்தளாய் நகரில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தேசிய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றுள்ளது.

நாட்டில் கொரோனா நோயாளர்கள் அதிகரிப்பு,தேர்தலை நிறுத்து, தனியார் பல்கலைக் கழகத்தினை சட்டமாக்குவதை நிறுத்து, சுதந்திரமான கல்வியும், சுகாதாரம், பெற்றுக்கொடு போன்ற சுலோகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தி கோஷங்களை எழுப்பினர்.(ஜ-4)

## நாட்டில் அபிவிருத்தியை நிலைநாட்ட தேசியக்கட்சிகளுடன் பயணிக்க வேண்டும்

### கிருபாகரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரசியல் என்பது மக்களுக்கு செய்யும் சேவை. தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்காக போராடுவதற்கு இங்கு பல தமிழ்க் கட்சிகள் உள்ளன.

நாட்டில் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டுமெனில் தேசிய கட்சிகளுடன் பயணிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் அ.கிருபாகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தனிநபர் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும், சுய தொழில்களை அமைத்துக்கொடுக்க வேண்டும்.

எனவே தான் நான் தேசியக் கட்சியில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எமது நாடு அதிகபடியான இறக்குமதியை செய்து வருகின்றது. அதில் உணவுப் பண்டங்களை அயல் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருகின்றது.

இதற்கு காரணம் தற்சார்பு பொருளாதாரத்தை ஊக்குவிக்காததேயாகும். பெரும் பங்கு வகிப்பது விவசாயம். விவசாயத்தை கைவிட்ட நாடுகளின் நிலையை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

அந்த நிலை எமது நாட்டிற்கு வரக்கூடாது என்று எண்ணுகின்றேன். வடக்கில் பெரும்பாலான விவசாயிகள் மழை நீரை நம்பியே விவசாயம் செய்கின்றனர். அதற்குக் காரணம் போதிய நீர் வசதி இல்லாததேயாகும்.

இங்கு பெரும்பாலான சிறு குளங்கள் புனரமைக்கப்படாமல் உள்ளன. முதலில் அதை நாம் சரி செய்ய வேண்டும்.

வாக்குச் செலுத்துவது என்பது தனிப்பட்ட உரிமை. எனக்கு வாக்கு செலுத்துங்கள் என்று சொல்லலாம். மற்றவர்களுக்கு வாக்கு செலுத்தாதீர்கள் என்று சொல்வது எனது அரசியலில்லை.

தேசியத்தோடு அபிவிருத்தியையும் முன்னெடுக்கும் நபர்களை சரியாக இனங்கண்டு தனிப்பட்ட சுய சிந்தனையில் வாக்கு செலுத்தி சிறந்தவர்களை தெரிவு செய்ய வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஜ-17)

## கொரோனா சாட்சியங்களை அழித்த சீனா ஹொங்கொங் பேராசிரியர் தகவல்

(ஹொங்கொங்)

.சீனாவின் வுஹான் நகரில் கொரோனா வைரஸ் தொற்று பரவியது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கும் முன்னர் அதிகாரிகள் சாட்சியங்களை அழித்திருந்ததாக ஹொங் கொங் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் க்வோன் யுன் ஹுனான் தகவல் வெளியிட்டுள்ளார்.

விசாரணை குழுவினர் வுஹான் நகருக்கு செல்லும் போது நகரில் வன விலங்குகள் விற்பனை செய்யப்படும் சந்தையில் இருந்த சாட்சியங்கள் அழிக்கப்பட்டிருந்ததாக கொரோனா வைரஸ் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்க உதவிகளை வழங்கிய இந்த பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

"நாங்கள் ஹுனான் சந்தை தொகுதிக்கு சென்றோம்,. எனினும் அங்கு எதுவும் இருக்கவில்லை.

வுஹான் நகரில் கொரோனா வைரஸ் தொற்றி வருவதை கூட அவர்கள் மறைத்தனர்" என பேராசிரியர் க்வோன் யுன் ஹுனான் கூறியுள்ளார்.

உலக நாடுகளில் முதல் முதலில் சீனாவிலேயே கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்தது.

அங்கு 84 ஆயிரத்து 292 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதுடன் 4 ஆயிரத்து 634 பேர் உயிரிழந்தனர்.

கொரோனா வைரஸ் தொடர்பான உண்மைகளை மறைத்ததாக சீனா மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் அந்த குற்றச்சாட்டுக்களை சீன அரசு மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

பாராளுமன்றத் தேர்தல் -2020
❖யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் தந்த தலைசிறந்த ஆற்றலாளர்களில் ஒருவன்
❖சமூக சேவைகள் உத்தியோகத்தர்.
❖பல பொது அமைப்புக்களில் இணைந்து சேவைகள் செய்தவர்.
❖ஆக்க இலக்கியவாதி.

வேதநாயகம் தபேந்திரன்
B.Com (Jaf), PGD.PDS (Jaf), M.A(Jaf)
9
(058)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி
X 9
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களே!
எங்கள் நண்பனை வெற்றி பெறச் செய்யுங்கள்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பழைய மாணவ நண்பர்கள்.

# சஜித்-ரணில் பிளவென்பது அரங்கேற்றப்படும் நாடகம்



(கொழும்பு)

ரணில் மற்றும் சஜித் அணிகள் அரங்கேற்றுவது ஒரு நாடகமாகும். தேர்தலின் பின்னர் இருதரப்பினரும் இணைந்து கொள்வரென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட வேட்பாளரும், பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடுவதால் பலரை ஐ.தே.க. கட்சியைவிட்டு நீக்கி யுள்ளது.

நீக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலை மேலிருந்து கீழாகவும் கீழிருந்து மேலா கவும் நன்கு பரிசீலித்தோம். அதில் சஜித் பிரேமதாஸவின் பெயர் எங்கும் இல்லை.

ரணில் - சஜித் பிளவு என்பது பொய்யான விடயம். இவர்கள் மக்களை ஏமாற்றுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# பொதுத் தேர்தல் முடிந்ததும்

## ஊரடங்கு பிறப்பிப்பதற்கான அவசியமில்லை



(கொழும்பு)

2020 ஆம் ஆண்டுக்கான பொதுத் தேர்தல் முடிந்ததும் ஊரடங்கு உத்தரவு விதிக்க வேண்டிய அவசியமில்லை என விமல் வீரவன்ச தெரிவித் துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர், தேர்தலுக்குப் பின்னர் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ள தாக வெளியாகியுள்ள தகவல் களை நிராகரிப்பதாகக் கூறி னார்.

மேலும் நாட்டில் விமான நிலையங்கள் மீண்டும் திறக் கப்பட வேண்டிய நேரத்தில் ஊரடங்கு உத்தரவு விதிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் சுட்டிக்காட் டினார்.

அத்துடன் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவ தற்கான நடவடிக்கைகளே இடம்பெறும் என்றும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஏனைய நாடு களில் வசிக்கும் இலங்கையர் களுக்கும் நியாயமான முறை யில் நடத்தப்படுவதை அரசாங் கம் உறுதி செய்யும் என்றும் அவர் உறுதியளித்தார்.

வெளிநாடுகளுக்கு திருப்பி அனுப்புவதன் மூலம் இலங் கையர்களின் பாதுகாப்பையும் அதேவேளை அனைத்து மக் களின் பாதுகாப்பையும் அர சாங்கம் உறுதி செய்யும் என் றும் விமல் வீரவன்ச சுட்டிக் காட்டினார். (ஐ-4)


பரவுலகில் 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். திருமதி. அன்ரனற் இருதயநாதர் (யோகமலர்)

"சீவியத்தில் என்னை நேசித்தவரே, மரணத்திலும் எம்மை மறவாதீர்கள்"



இகவுலகில் முகிழ்வு 07 . 04 . 1955

பரவுலகில் அமர்வு 01 . 08 . 2015

பாசமிகு தலைவியாய், நேசமிகு தாயாய், அறம், நெறி, பண்புக்கு பாத்திரவாளராய் இம்மையிலும் மறுமையிலும் இனியவளாய், தருமத்தின் உபகாரியாய், எங்கள் குடும்பத்தின் அகல் விளக்காய் வாழ்ந்த எங்கள் அம்மா! நாமோ கரம் கூப்பி சிரம் தாழ்த்தி ஆராதிக்கின்றோம்.

உங்கள் நித்திய வாழ்வுக்காக நித்தமும் இறைவனை வேண்டி நிற்கின்றோம் அம்மா.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 01.08.2020 இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் கோயில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் (குழந்தை இயேசு ஆலயத்தில்) காலை 6.00 மணிக்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியில் கலந்துகொண்டு இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"நான் வாழ்ந்தாலும் இறந்தாலும் இறைவனுக்கே சொந்தம்"

இவரது பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

தகவல்:
செ.இருதயநாதர் (துரைமணி)
077 130 8661
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு.

(3365)


# முஸ்லிம்களுக்கு தனியான சட்டம் அவசியமில்லை-முஸம்மில்

(கொழும்பு)

முஸ்லிம் சட்டம், காதி நீதிமன்றம் ஆகியவற்றை நீக்குவதை எதிர்த்து ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் வேட்பாளர் இம்தியாஸ் பாக்கீர் மாக் கார் வெளியிட்டுள்ள கரு த்தை கண்டிப்பதாக ஸ்ரீல ங்கா பொதுஜன பெரமுன வின் தேசிய பட்டியல் வேட் பாளரும் தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளருமான மொஹ மட் முஸம்மில் தெரிவித் துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் போன்ற சிங்களம் படித்த, சிங்கள மொழியை நன்றாக பயன்படுத்தும் மற்றும் சிங்கள மக்களின் நன்மதிப்பை பெற்ற ஒரு வர் இப்படியான அடிப்படை வாத நிலைப்பாட்டை கொண்டிருப்பது குறித்து வருத்தப்படுகிறேன்.

ஒரு நாட்டில் ஒரு சட் டம் அமுலில் இருக்க வேண்டும். இன ரீதியாக தனித்தனியான சட்டங் களை உருவாக்கினால், சிங்களவர், தமிழர், முஸ் லிம்கள் என தனித்தனி யாக சட்டங்களை ஏற்ப டுத்த நேரிடும்.

இறுதியில் இந்த தனிச் சட்டங்களை நடைமுறைப் படுத்த இன ரீதியாக தனி நாடுகள் உருவாகும் நிலை மைக்கு இது செல்லும்.

இதனால், இலங்கை நாடு என்ற வகையில் ஒரு நாடு ஒரு சட்டத்தின் கீழ் செயற்பட வேண்டும். இனம் மற்றும் மத ரீதி யான தனியான சட்டங்கள் தேவையில்லை எனவும் மொஹமட் முஸம்மில் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# மதுபானத்துடன் சனிடைசர் கலப்பு; குடித்த பத்து பேர் உயிரிழப்பு

## ஆந்திராவில் விநோதம்

(ஆந்திரா)

ஆந்திராவில் தன்னா ர்வலர்கள் வழங்கிய சனி டைசரை அதிக போதைக் காக சாராயத்துடன் கல ந்து குடித்து 10 பேர் உயி ரிழந்தனர்.

ஆந்திர மாநிலம் பிர காசம் மாவட்டத்தில் உள்ள குறிச்சேடு பகுதி யில் கொரோனாத் தொற்று அதிக அளவில் கண்ட றியப்பட்டதால், கடந்த 10 நாட்களாக ஊரடங்கு கடு மையாக்கப்பட்டுள்ளது. மதுக்கடைகள் மூடப்பட்டு ள்ளன.

இந்நிலையில், மதுக் கடைகள் மூடப்பட்டதால் அப்பகுதியைச் சேர்ந்த மதுப் பிரியர்கள் 20 பேர் போதைக்காக சனிடை சரை குடித்ததாக கூறப்ப டுகிறது.

தன்னார்வலர்கள் வழங்கிய சனிடைசரை சாராயத்துடன் கலந்து குடித்து உள்ளனர். இந் தச் சம்பவம் கடந்த 5 நாட்களுக்கு முன் நடந்து.

இருபது பேரும் வைத் தியசாலையில் அனுமதி க்கப்பட்ட பின் அதில் 10 பேர் உயிரிழந்தமை குறி ப்பிடத்தக்கது. (2)

# க.பொ.த சாதரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஒன்லைன் மூலம்

(கொழும்பு)

**எதிர்வரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை ஒன்லைன் முறையில் பெறுவதற்கு தீர்மானித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், இம்மாதம் ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். அரச பாடசாலைகளின் ஊடாக தோற்றுவோர் அதிபர் மூலமாக ஒன்லைன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தின் ஊடாக விண்ணப்பிப்பது அவசியம். இதற்குரிய முகவரி **www.doenets.lk** என்பதாகும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியைப் பெற்று உரிய முறையில் பூர்த்தி செய்து கிராம உத்தியோகத்தரின் அத்தாட்சிப்படுத்தலுடன் விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்புவதற்கான முகவரி பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பாடசாலை பரீட்சை ஒருங்கிணைப்பு மற்றும் பெறுபேறுகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி - 153, கொழும்பு என்பதாகும்.

தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை 2020 என்பதையும் விண்ணப்பதாரியின் நகரத்தின் பெயரையும் குறிப்பிடல் வேண்டும். இது தொடர்பான மேலதிக தகவல்களை 1911 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக் கொள்ள முடியும் என அறிவித்துள்ளார். (ஜ-4)







# சமூகத்திற்குள் கொரோனா நோயாளிகள் உறுதிப்படுத்தினார் சுகாதாரப் பணிப்பாளர்

(கொழும்பு)

**நாட்டில் சமூக மட்டத்தில் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டாலும் தீவிரமாக பரவுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கொரோனா கொத்தனியில் நோயாளிகள் அடையாளம் காணப்படுவதில் சில சமூகப் பரவல் காணப்பட்டாலும் குறித்த நோயாளிகள் ஊடாக வைரஸ் சமூகத்திற்குள் பரவுவதனை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.**

சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய பிரிவுகள் இணைந்து கொரோனா பரவுவதனை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



சுகாதாரப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவு நோயாளிகளுக்கு அருகில் செயற்பட்டவர்கள் தொடர்பில் செயற்படுவதாக சுகாதாரப் பணிப்பாளர் கூறியுள்ளார். கொரோனா பரவல் தொடர்பில் விசேட அறிக்கை வெளியீட்டில் இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# பிள்ளையானுக்கு அமைச்சுப் பதவி

## வழங்குவதாக மகிந்த தரப்பு உறுதியளிப்பு


(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையானுக்கு அமைச்சுப்பதவி வழங்கப்படும்என உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

சிறையில் இருக்கும் பிள்ளையான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கீழ் உள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பாக கிழக்கில் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

இந்நிலையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றால் அவருக்கு அமைச்சுப் பதவியை வழங்குவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது என பிள்ளையானுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் அவர் பிணை பெற்று சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டால் மட்டுமே அவர் அந்தப் பதவியைப் பெறுவார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டியுள்ளது.



பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தால், அவருக்கு பிணை வழங்க மறுக்கப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெறவுள்ள இரட்டைச் சகோதரர்கள்



(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் மேஜர் ஜெனரல் பதவியிலிருக்கும் இரட்டையர்களான மேஜர் ஜெனரல் பூரக செனவிரத்ன மற்றும் மேஜர் ஜெனரல் ஜயந்த செனவிரத்ன ஆகியோர் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற தகுதி பெற்றுள்ளனர். இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இரட்டைச் சகோதரர்களான இலங்கை சமிக்ஞை படையணியை சேர்ந்த மேஜர் ஜெனரல் பூரக செனவிரத்ன பாதுகாப்பு தலைமை பிரதானி அலுவலகத்தில் பதவி நிலை பிரதானியாகவும் மேஜர் ஜெனரல் ஜயந்த செனவிரத்ன சிங்கப் படையணியின் படைத் தளபதியும், மேற்கு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் படைத் தளபதியாக தற்போது பதவி வகிக்கின்றார்கள்.

இருவரும் பாடசாலையில் மாணவ தலைவர்களாக இருந்து விளையாட்டுத் துறைகளில் சிறப்பாக செயற்பட்டு பின்னர் இலங்கை இராணுவத்தில் கெடெற் அதிகாரியாக இருவரும் இணைந்து கொண்டனர்.

பின்னர் குவேட்டாவில் வெளிநாட்டு பயிற்சியை ஒன்றாக மேற்கொண்டு இராணுவத்தில் அனைத்துப் பதவி உயர்வுகளையும் ஒன்றாகப் பெற்று இருவரும் ஒரே தினத்தில் இராணுவத்திலிருந்து ஓய்வுபெறவுள்ளனர்.

இராணுவத்தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வின் முதல் அங்கமாக கையொப்பமிடும் நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அவமதிப்பு

நேற்று என்னை ஒருத்தன் அவமானமாக பேசிவிட்டான் சேர். என்னால் அதை தாங்க முடியவில்லை. இரவு பூராக தூங்க முடியவில்லை. மனதிற்கு ரொம்ப கஷ்டமாக இருக்கின்றது என்று சொல்லி வருத்தப்பட்டார் ஒருத்தர். இது அவருக்கு மட்டும் ஏற்படுகின்ற அனுபவம் இல்லை. எல்லோருக்குமே எப்போதாவது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலே அவமதிப்பு ஏற்படத்தான் செய்கின்றது.

அவமதிப்பு ஏற்பட்டு விட்டால் உடனே நாங்கள் தான் மனதிற்குள்ளே அதை நினைத்து நினைத்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். மகான்கள் எல்லாம் அப்படி அவஸ்தைப்படுவதில்லை. அவமதிப்புக்களை அவர்கள் எடுத்துக்கொள்ளும் விதமே தனி. புத்தர் ஒரு நாள் கிராமத்து வழியாக போய்க்கொண்டு இருக்கின்றாராம்.

அந்த ஊர் மக்கள் அவரைப் பற்றி மிகவும் கன்னா பின்னா என்று பேசியிருக்கிறார்கள், திட்டியிருக்கின்றார்கள், அவமதித்திருக்கின்றார்கள். அவர்கள் அவமதித்துச் சொன்னதை எல்லாம் ரொம்ப பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்தார் இவர். அதற்குப் பிறகு அவர்களைப்பார்த்து "நீங்கள் இன்னும் ஏதாவது சொல்ல ஆசைப்படுகின்றீர்களா? ஏன் என்றால் நான் அடுத்த கிராமத்திற்குப் போக வேண்டியிருக்கின்றது.

குறிப்பிட்ட நேரத்திலே அங்கே போய்ச் சேர வேண்டும். அங்கே எனக்காக பலர் காத்துக்கொண்டிருப்பார்கள். நீங்கள் இன்னும் என்னைப் பார்த்து ஏதாவது சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டால் நான் இந்த வழியாக மறுபடியும் வரும் போது அற்காக நேரம் ஒதுக்குகின்றேன். இந்தச் சமயத்தில் நீங்கள் வந்து சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லுங்கள்" என்றார். இவர் இப்படிச் சொன்னதைக் கேட்டதும் அந்த ஊர் மக்களுக்கு மிகவும் ஆச்சரியம். என்ன இது, நாங்கள் இவரைத் திட்டிக்கொண்டிருக்கின்றோம். இவர் இப்படி சொல்கின்றாரே என்று யோசித்தார்கள்.

அவரிடமே கேட்டு விட்டார்கள் அதை. "என்னங்க இது... நாங்கள் ஏதோ ஒன்றை உங்களிடம் சொல்லிக் கொள்ளவில்லை. உங்களை அவமானப்படுத்திக் கொண்டல்லவா இருக்கின்றோம்" என்றார்கள். புத்தர் சிரித்தார். "அது உங்களுக்கு உள்ள சுதந்திரம். ஆனால் அது ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் எனக்குள்ள சுதந்திரம். இப்போது அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை" என்றார். கிராமத்து மக்கள் ஆச்சரியமாக அவரைப் பார்த்தார்கள்.

புத்தர் மறுபடியும் சொல்ல ஆரம்பித்தார்..."இதோ பாருங்கள் உங்கள் கிராமத்திற்கு வருவதற்கு முன்னர் நான் இன்னொரு கிராமம் வழியாக நடந்து வந்து கொண்டிருந்தேன். அந்த ஊர் மக்கள் எனக்கு இனிப்புக்களையெல்லாம் கொண்டு வந்து தந்தார்கள்".

"உங்கள் அன்புக்கு நன்றி. நான் இனிப்பு சாப்பிடுவதில்லை. அதனாலே எனக்கு இனிப்புக்கள் வேண்டாம்" என்று அவர்களிடம் சொன்னேன். "அதற்குப் பிறகு அந்த இனிப்புக்களை அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

அந்தக் கூட்டத்திலே இருந்த ஒருத்தர் "என்ன செய்திருப்பார்கள், அவர்கள் அதைத் திருப்பி வீட்டுக்கு எடுத்து கொண்டு போயிருப்பார்கள்" என்றார். அப்படியே தான் இப்பவும் நீங்கள் செய்யப் போகின்றீர்கள். எனக்கு நீங்கள் ஏற்படுத்திய அவமானங்களை இப்பொழுதே நீங்கள் திரும்ப உங்கள் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போக வேண்டியதுதான்.

ஏனென்றால் நான் உங்களுடைய அவமதிப்புக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனாலே வேறு வழியில்லை. நீங்கள் எடுத்துக் கொண்டு போக வேண்டியதுதான் என்றார் புத்தர். இப்போது தான் அந்தக் கிராமத்து மக்கள் யோசிக்க ஆரம்பித்தார்கள்.

அவமதிப்புக்களை பெரியவர்கள் எதிர்கொண்ட முறை இது. நாங்கள் அப்படியா இருக்கின்றோம். எங்களுடைய ஆள் ஒருத்தன் மிகவும் வேகமாக வந்தான். "சேர் எங்கள் எதிர் வீட்டுக்காரன் என்னை நாலு பேருக்கு முன்னால் அவமானப்படுத்தி விட்டான் என்றார்.

என்ன செய்தான்?" என்று கேட்டேன். "பளார் பளார்" என்று என் கன்னத்திலே அறைந்து விட்டான் சேர் என்றார். அவனிடம் ஆறு வருடங்களுக்கு முன்னர் 50 ருபாய் கடன் வாங்கியிருந்தேன் என்றான். அதைத் திருப்பி கொடுத்திருந்தால் அறைந்திருக்க மாட்டானே என்றேன்.

"திருப்பி கொடுத்து விட்டேன் சேர் மறுபடியும் அறைகிறான்" என்றான் அவன். அது எப்படி? என்றேன். ஒன்றும் புரியாமல். "நான் திருப்பிக்கொடுத்தது அவனிடம் வாங்கிய பணத்தை இல்லை சேர். அவனிடம் வாங்கிய அறையை" என்றார்.

# ஷானியின் கைது எதிர்வரவிருக்கும் மிகமோசமான அரசியல் வேட்டையின் முன்னோட்டமே - மங்கள

(கொழும்பு)

ராஜபக்ஷக்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு எதிராக அப்பழுக்கற்ற சான்றுகளுடன் விசாரணைகளை மேற்கொண்ட ஷானி அபேசேகர ஒரு புலனாய்வாளர் மாத்திரமே.

அவர் கைது செய்யப்பட்டிருக்கும் அதேவேளை, இந்த விசாரணைகளை தொடங்கி வைத்த முன்னாள் அரச தலைவர் இப்போது ஆளுந்தரப்புடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றார்.



இவையனைத்தும் விரைவில் இடம்பெறவிருக்கும் மோசமான வேட்டையொன்றுக்கான முன்னோட்டமாகும் என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஷானி அபேசேகர வழக்கு விசாரணையொன்றில் சாட்சியங்களை மறைத்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

இதனைக் கண்டிக்கும் விதமாகத் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை மங்கள சமரவீர செய்துள்ளார்.

பொலிஸாரின் வேலை குற்றங்களை எதிர்த்துப் போராடுவதோடு, போதைப்பொருள் கடத்தல்காரர்களைக் கைது செய்வதும் நாட்டின் முக்கிய பதவிகளில் உள்ள ஏனைய குற்றவாளிகளையும் அடையாளங்காண்பதுமே ஆகும்.

மாறாக சட்டக்கல்லூரிக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையை இன அடிப்படையில் கணிப்பீடு செய்வதும், இனரீதியான முரண்பாடுகளைத் தூண்டுவதுமல்ல என்று உளவுச்சேவையின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவிற்கு பொலிஸ் மா அதிபர் தெளிவுபடுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

கடந்த 2012 ஆம் ஆண்டில் இயல்பிற்கு மாறான வகையில் சட்டக்கல்லூரிக்குத் தெரிவான முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருப்பதாகக் கடந்த 2015 ஆம் ஆண்டில் புலனாய்வுப் பிரிவு அறிக்கைப்படுத்தியிருப்பதாக உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையான முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன சாட்சியம் வழங்கியிருந்தார்.

இது குறித்த பத்திரிகைச் செய்திகளை மேற்கோள்காட்டி சமூகவலைத்தளங்களில் கடுமையான கண்டனங்கள் வெளியிடப்பட்டுவந்த நிலையிலேயே மங்கள சமரவீர இத்தகைய பதிவொன்றைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கட்சியிலிருந்து நீக்கம்; வழக்கு தொடர்ந்த ரஞ்சன்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் அங்கத்துவத்தில் இருந்து நீக்க கட்சி எடுத்துள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை தடுக்க தடையுத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு கோரி, அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, உப தலைவர் ரவி கருணாநாயக்க, பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு எடுத்த தீர்மானத்திற்கு அமையவே ஐக்கிய மக்கள் சக்தி என்ற கூட்டணி உருவாக்கப்பட்டதாக ரஞ்சன் ராமநாயக்க தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# கிழக்கு முனையத்தை விற்க வேண்டாம்

## தொடரும் சத்தியாக்கிரகம்



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்பனை செய்ய வேண்டாம் என்று கோரிக்கை விடுத்து கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையை பாதுப்பதற்கான ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தை அரசாங்கத்திலிருந்து உறுதியான தீர்மானம் கிடைக்கும் வரையில் கைவிடப் போவதில்லை என்று ஒன்றிணைந்த தொழிற்சங்க தலைவர் பிரசன்ன களுத்தரதுங்க தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்குமுனையை பாதுகாப்பதற்கான ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரக போராட்டம் மூன்றாவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அது தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பு துறைமுகத்தின் கிழக்குமுனையை விற்பனை செய்யவேண்டாம் என்றே நாங்கள் இந்த சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தி வருகின்றோம். கடந்த புதன் கிழமையே இந்த போராட்டத்தை ஆரம்பித்தோம்.

எமது ஆர்ப்பாட்டத்தில் 23 தொழிற்சங்கங்கள் இணைந்து கொண்டுள்ளதுடன், துறைமுகத்தில் பணியில் ஈடுபட்டிருந்த தொழிற்சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் தற்போது வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் இதுவரையிலும் அரசாங்கத்திடமிருந்து உரிய பதில் கிடைக்கப் பெறவில்லை என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# வாக்காளர் அட்டைகளை விரைந்து பெற்றுக் கொள்ளவும்

(கொழும்பு)

வாக்காளர்களின் முகவரிகள் பதிவு செய்யப்படாத 4 இலட்சத்து 50 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் தபால் அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாத வாக்காளர்கள் தபால் அலுவலகங்களுக்கு சென்று தங்களை அடையாளப்படுத்தக்கூடிய ஆவணங்களைச் சமர்ப்பித்து வாக்காளர் அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறும் தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கை நூற்றுக்கு 99 வீதம் நிறைவடைந்துள்ளது. (ஜ-4)










# கம்பெரலிய தோல்வியடைந்த திட்டம்

## பொன்சேகா சாடல்

(கொழும்பு)


நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த கம்பெரலிய திட்டம் தோல்வியடைந்த திட்டம் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். ஜா-எலவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசார கூட்டமொன்றில் உரையாற்றி போதே அவர் இதனைத் தெரிவித்தார். கம்பெரலிய திட்டத்தினால் மேல் மாகாணத்திற்கு எந்த பலனும் இல்லையென அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

அன்புடையீர்! கடந்த 02.07.2020 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர். **வல்லிபுரம் பாலசிங்கம்**

**(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 02.08.2020 நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதியம் 11.00 மணியளவில் இடம்பெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வாழைவளவு,
கரணவாய் மத்தி
கரவெட்டி.

021 226 2172

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(K-9979)

# ஆண்டுகள் பதின்மூன்று உன் நினைவுகளுடன்



காசினி விட்டுக் காவியமான எங்கள்
செல்வமே!
13 ஆண்டுகள் ஓடி மறைந்ததை எண்ணி
பெற்ற வயிறு பற்றி எரியுதடா
பேதை நான்
பித்தாகிப் போனேன் நிலா!
அருமைத் தந்தை அன்பான அண்ணா
ஆற்றுவார் இன்றி நடமாடும்
பித்தர்களானார்
குன்றின் மேல் தீபமாய் ஒளிரும்
நிலாவே!
குன்றாப் புகழ் பெற்றாய், குவலயத்தில்
பொறிக்கப்பட்டாய்
காலம் உள்ளவரை நின்
ஆத்ம சாந்திக்காய்
இறைவனை தொழுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அம்மா டடா அண்ணா அண்ணி குட்டிநிலா

## சகாதேவன் நிலக்ஷன்


1985.11.08 - 2007.08.01

(3445)

250,(47) புகையிரத நிலைய வீதி, கொக்குவில் 2020.08.01

# எமக்கான வாக்குகளை யாராலும் இல்லாமல் செய்ய முடியாது

## ரணில் நம்பிக்கை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினால் மாத்திரமே நாட்டை காப்பாற்ற முடியும் என கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'கட்சியில் இருந்து பிரிந்து சென்ற யாரும் உண்மையான ஐக்கிய தேசியக் கட்சியினராக இருக்க முடியாது.

அதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும்ஆட்சிக்கு கொண்டுவர வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியினால் மாத்திரமே நாட்டை காப்பாற்ற முடியும். கடந்த எட்டு மாதங்களாக ஆட்சியில் உள்ள மொட்டு கட்சியினர் எதனை செய்தார்கள்.

நாட்டு மக்களுக்காக அவர்கள் எதனையும் செய்யவில்லை. வீழ்ந்திருக்கின்ற நாட்டை மீட்டெடுக்க அரசாங்கத்தினால் முடியாது.

அது ஐக்கிய தேசியக் கட்சியினால் மாத்திரமே சாத்தியமானது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு சிங்கள வாக்குகள் உள்ளன. முஸ்லிம் வாக்குகள் உள்ளன. இதனை யாராலும் இல்லாமல் செய்ய முடியாது என அவர் தெரிவித்தார்.(ஜ-4)

# குணமடைந்தோர் 2391

(கொழும்பு)

கொரோனா வைரஸ் (கொவிட் 19) தொற்றுக்குள்ளான மேலும் 58 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி 2 ஆயிரத்து 391 பேர் முழுவதுமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 2811 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது 412 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவரும்நிலையில் இதுவரை 11 கொரோனா நோயாளர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஜ-4)

# துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தின்
நடனபாட ஆசிரிய ஆலோசகர்
திருமதி அகல்யா இராஜபாரதி அவர்களின் அன்புத் தந்தை

அமரர்
**மாணிக்கம் சுந்தரம்**
**அவர்கள்**



இறையடி சேர்ந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தோற்றம்: 22.12.1937
மறைவு: 30.07.2020

நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணம்
வலயக் கல்வி அலுவலகம்

(K-9978)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 240 | 240 | 220 | 300 |
| தக்காளி | 60 | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 80 |
| கோவா | 120 | 120 | 120 | 120 |
| கரட் | 120 | 150 | 140 | 150 |
| பூசணி | 50 | 35 | 50 | 80 |
| புடோல் | 50 | 60 | 60 | 100 |
| வாழைக்காய் | 180 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 130 | 130 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 120 | 140 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 130 | 100 | 160 |
| லீக்ஸ் | 60 | 90 | 80 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 140 | 140 | 150 | 120 |
| போஞ்சி | 180 | 220 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 200 | 200 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 55 | 70 | 60-80 |
| இராசவள்ளி | --- | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 70 | 50 | 50 |

# ரயிலுடன் மோதி ஒருவர் பலி

(கொழும்பு)

அம்பலாங்கொட ரயில் நிலையத்தின் அருகில் ரயிலுடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பலவிட்டிய-ஊரவத்த பிரதேசத்தினைச் சேர்ந்த 59 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ஜ-4)

# 5 ஆயிரத்து 814 தேர்தல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

தேர்தல் சட்டத்தினை மீறிய சம்பவம் தொடர்பில் 5 ஆயிரத்து 814 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜூன் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் புதன்கிழமை வரை முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையங்களில் குறித்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் குறித்த காலப்பகுதியில் தற்போது வரை வன்முறை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# அரச அதிகாரிகள் இலஞ்சம் பெறும் வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

அரச அதிகாரிகள் இலஞ்சம் பெறும் வீதம், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் அதிகரித்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட 17 சுற்றிவளைப்புகளில் 21 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மினி வீரசூரிய தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் அதிபர் ஒருவர், பொலிஸ் சார்ஜன்கள் நால்வர், கான்ஸ்டபிள் ஒருவர், பொலிஸ் பரிசோதகர் ஒருவர், உப பொலிஸ் பரிசோதகர்கள் இருவர் மற்றும் நேரக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் அடங்குகின்றனர்.

இதனைத் தவிர குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பதிவாளர், மத்திய கலாசார நிதியத்தின் செயற்றிட்ட முகாமையாளர், பிரதேச செயலாளர், பிரதிப் பணிப்பாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊழல் குற்றச்சாட்டில் கடந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் 27 ஆம் திகதி வரை 24 சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாட்டில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# முன்னாள் சி.ஐ.டி பணிப்பாளர் ஷானி அபேசேகர கைது



(கொழும்பு)

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் நேற்று வெள்ளிக்கிழமை காலை அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டு காரணமாக அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர கடந்த ஜனவரி மாதம், உடன் அமுலுக்கு வரும் வகையில் பணி நீக்கப்பட்டு, காலி பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பிரத்தியேக உதவியாளராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)




# குவைத்திற்கு செல்லத்தடை

(குவைத்சிட்டி)

இலங்கை, இந்தியா, ஈரான், பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து வருபவர்களுக்கு மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக, குவைத் நேற்று முன்தினம் அதிகாலை அறிவித்துள்ளது. இதேவேளை இலங்கை, பங்களாதேஷ் பிலிப்பைன்ஸ், இந்தியா, பாகிஸ்தான், ஈரான், நேபாளம் ஆகிய நாடுகளைத் தவிர, குவைத் நாட்டவர்கள் மற்றும் அந்நாட்டில் வசிப்பவர்களுக்கு, குவைத்திலிருந்து வெளியேறவும் குவைத்திற்கு வருவதற்குமான அனுமதியை வழங்குவதற்கு அந்நாட்டு அமைச்சரவை முடிவு செய்துள்ளதாக, குவைத் அரசாங்க தொடர்பாடல் நிலையம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திலிருந்து வர்த்தக விமான சேவைகளை பகுதியளவில் ஆரம்பிக்கவுள்ளதாக கடந்த மாதம் குவைத் அறிவித்திருந்தது. ஆயினும், கொரோனா வைரஸ் தொற்று நிலையை அடுத்து,அந்நாட்டு விமான சேவைகள் வழமைக்குத் திரும்பும் நிலையில், மேலும் ஒரு வருட காலம் வரை, விமான நிலையத்தின் முழுச் செயற்பாட்டையும் வழமைக்கு கொண்டுவருவதை, எதிர்பார்க்க முடியாது எனவும் அறிவித்துள்ளது. (ஜ-4)










ஜோர்தான் நாட்டிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட 166 பேர் கிளிநொச்சி இயக்கச்சியில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய கலந்து கொண்டு மருத்துவச் சான்றிதழ்களை வழங்கினார். (5-315)

## யாழ். இளைஞன் லண்டனில் உயிரிழப்பு

(கரணவாய்)

யாழ். கரவெட்டியைச் சேர்ந்த இளைஞன் லண்டனில் இடம்பெற்ற விபத்தில் பரிதாபமாக உயிரிழந்தார். யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட இளைஞர் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் வடமராட்சி கரவெட்டி பகுதியைச் சேர்ந்த சுதர்சன் (வயது 20) என்ற இளைஞன் இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். (5)

# துண்டுப்பிரசுரங்கள் வழங்குபவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா நகர்ப்பகுதிகளில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் சுயேட்சை குழுக்களின் தேர்தல் பரப்புரை துண்டுப் பிரசுரங்களை வியாபார வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்கும் ஆதரவாளர்கள் , வேட்பாளர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்ள்ள கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் தேர்தல் பரப்புரை துண்டுப்பிரசுரங்களை வர்த்தக, நிலையங்கள், வங்கிகளுக்கு விநியோகிப்பவர்களுக்கு கொரோனா நோய் இனம் காணப்பட்டால் அவர்கள் சென்ற வர்த்தக நிலையங்கள், வங்கிகள் என பல இடங்களை முழுமையாக முடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதை கவனத்திற் கொண்டு பொலிஸார் அவர்களுக்கு எதிராக நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் அவர்களைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து தற்போதைய நிலைமைகளைத் தெளிவுபடுத்தி வருவதுடன் அவர்களைப் பொலிஸ் பிணையில் விடுவித்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று வவுனியா நகர்ப் பகுதியில் வர்த்தக நிலையங்களுக்கு தேர்தல் பரப்புரை துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வந்த சிலர் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-5-299)

# விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(நெளுக்குளம்)

வவுனியா உளுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் முதியவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். குறித்த விபத்து தொடர்பாக தெரிய வருகையில்,

வவுனியாவிலிருந்து செட்டிகுளம் நோக்கிப் பயணித்த் பேருந்து உளுக்குளம் பகுதியில் சென்றபோது, வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவருடன் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

இவ் விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவர் படுகாயமடைந்த நிலையில் நோயாளர்காவு வண்டி மூலம் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-299)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2075

Search for people, places and things

### கவின்

மனிதன் உணவின்றி 40 நாட்களும் நீரின்றி 3 நாட்களும் காற்றின்றி 3 நிமிடமும் உயிர் வாழலாம். ஆனால் நம்பிக்கையின்றி 3 நொடி கூட வாழ இயலாது




### ஜானகி

யாரையும் முக்கியமாக நினைக்காததும் யாருக்கும் முக்கியமில்லாதவர்களாக இருப்பதும் தான் வாழ்வில் பெரும் நிம்மதி தரும்



### விமல்

வாழ்வின் ஒவ்வொரு முறையும் உங்களைத் தூக்கி எறிந்தவர்களுக்கு நன்றி கூறுங்கள். ஏனெனில் அவர்கள் தான் உங்களை அடுத்த கட்டத்திற்கு வளர்த்து விடுகின்றனர்



### குமுதா

வாழ்க்கை
ஒரு
விசித்திரமான
பரீட்சை
ஒவ்வொரு
விதமான
கேள்விகள்
அவரவர்
கொடுக்கும்
விடைகளை
பொறுத்ததே
வாழ்க்கை...




### கமல்

ஒன்றை அடைய வேண்டும் என்று நினைத்து விட்டால் இறுதிவரை போராடு... விளைவுகளையோ அதில் ஏற்படும் தோல்விகளையோ பற்றிக் கவலைப்படாதே!



### அஸ்வின்


பொண்டாட்டி என்னைத் திட்டும்போது எப்பவும் உங்க அம்மா பேச்சைத்தான் கேட்பீர்களா...? என் மகனைத் திட்டும் போது அம்மா பேச்சைக் கேட்கவே மாட்டியா?



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாராளுமன்றத் தேர்தல் - 2020

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்




**டக்ளஸ் தேவானந்தா**

(செயலாளர் நாயகம் - ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)



**5**



**X**

**7**

**முடியப்பு றெமீடியஸ்**

A Self-Made Personality

(பிரபல மனித உரிமைகள் சட்டத்தரணி/ யாழ்.மாநகர சபை உறுப்பினர்)

**யாழினைப் பிரதிபலிக்கும் வீணை**

"போது சடக்கெனப் போகின்றது கண்டும் வாது செய்து என்னோ மனிதர் பெறுவது" திருமூலர் 2085

"சுடக்கு மேல் சுடக்குப்போட்டு 5 வருடத்துள் தீர்ப்பேன் என்பதனைக் கூறிக்கொள்கிறேன்"- டக்ளஸ் தேவானந்தா

தன்னலமற்ற கூடுதல் சேவை நல்க கூடுதல் ஆசனங்களை இம்முறை இரந்து வேண்டி நிற்பது ஈழமக்கள் ஜனநாயக கட்சியேயாம்.இக்கட்சியில். நாடாளுமன்றத் தேர்தலில் முதன் முறை களம் காண்கின்றார் இளம் முடியப்பு றெமடியஸ் LLB அவர்கள். சமகாலத்தில் இவர் யாழ் மாநகரசபையில் இதே கட்சித் தலைவராய் இருந்துள்ளார்.

இதற்கும் முன்னைய யாழ்.மாநகரத் தேர்தலில் ஆகக் கூடுதலான 4000 விருப்பு வாக்குகளைக் கூட்டணி சார்பில் பெற்றாலும் இரு அங்கத்தவர் குறைவினால் மேயராகாது எதிர்க்கட்சியில் அமர்ந்தவர். தனித்துவப் பிரபல்யமான இவர் முன்னைய நாடாளுமன்ற தேர்தலில். கூட்டணி சார்பிற் போட்டியிட்டு தகுதி அளவு வாக்குகளைப்பெற்றும் அவர் புறந்தள்ளப்பட்டார்.

இளமைத் துடிப்புச் சட்டத்தரணியாக, சமஷ்டி அரசியலமைப்பை ஆழப் படிக்க, அமெரிக்க அரசினால் அழைக்கப்பட்டவர். யாழில் மனித உரிமைகள் சட்டத்தரணியாக பல வருடங்கள் இயங்கிவந்து பல நூற்றுக்கணக்கான, முக்கியமாக இளைஞர்களுக்காக வாதாடி வெற்றிகண்டு விடுவித்துக் கடமைகளை நிறைவு கண்டவர்.

**தன் இனத்தாரையே ஏமாற்றலாகாது ?**

**திருவிவிலியம்/பரிசுத்தவேதாகமம்-லேவிய(ராகமம்)25:17. உங்களுள் எவரும் தம்(தமிழ்)இனத்தாரை ஏமாற்றலாகாது. கடவுளுக்கு அஞ்சி நடவுங்கள்! ஏனெனில், நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர்.**

**Holy Bible/ Leviticus 25:17. "Therefore you shall not oppress one another, but you shall fear your God; for I am the LORD your God**

ஏறத்தாழ 5 வருடங்களுக்கு முன்னரேயே களத்து முழுநிலையறிந்த நடுநிலை பத்திரிகை விடுத்த அவசர வேண்டுகோளாவது:-
தமிழ் இனமே! இன்னும் யாம் மௌனமாகத்தான் இருப்போமா? (புதன்கிழமை 20 ஜனவரி 2016, 06:20.09AM GMT] (வலம்புரி)

"எம் உயிரினும் மேலான தமிழ்மக்களுக்கு அன்பு வணக்கம். விடுதலைப் போராட்டத்தின் தோல்வி தந்த மனப் பாதிப்புக்கள் பலரையும் மௌனிகளாக ஆக்கிவிட்டது என்பதை உணரமுடிகிறது.

......................அந்த மௌனம் பலவற்றைப் பேசுகின்றன. இருந்தும் இனப்பற்று இல்லாத பதவி ஆசை பிடித்த ஊழல் மோசடிகளை கூசாமல் செய்கின்றவர்கள் தமிழ் மக்களின் மௌனத்தையும் தமக்குச் சாதகமாக்கி கொள்கின்றனர் என்ற உண்மை மிகப் பெரும் வேதனை தருவதாகும்."

(மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கைக் கோட்பாட்டினை ஈ.பி.டி.பி அன்று முதலே கொண்டிருக்க, அது வகையில், அபூர்வமாகக் கிடைத்த) "வடக்கு மாகாண சபையிலுள்ள **நான்கு ஐந்து உறுப்பினர்கள் சிலர்** "(நாமங்கள் பிரபலியம்)" முதலமைச்சருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் மன உளைச்சல்களைக் கொடுப்பதை குறிக் கோளாகக் கொண்டு செயற்படுவதற்குள் மிக மோசமான, தமிழ் மக்களுக்கு எதிரான நோக்கங்கள் உள்ளன என்றவாறு வெளிவரும் தகவல்களை எவரும் கண்டு கொள்ளாமல் விட்டுவிட முடியாது"

(கோரும் சமஷ்டியோ தனியலகோ கிடைத்தாலும்(?) இதுபோன்றுதான் கூத்தாடுவார்களா? குழப்பம் விளைவிப்பார்களா? அன்றேல் வாக்களித்தவர்கள் வெறுப்படைய சுயநலமாகத் தமக்குள்ளேயே குதூகலிப்பார்களா?)

**"காலம் நெருங்குகிறது நீங்கள் யார் என்பதைக் காட்டுவதற்கு. தேர்தலில் வென்றுவிட்டால் எப்படியும் நடக்கலாம் என்ற அரசியல்வாதிகளுக்கு மக்கள் சக்தி என்ன என்பதை செயலில் நிரூபித்துக் காட்டுங்கள்."**

"ஆம், தன் இனம் வாழ்வதற்காக, தன் தாய் மொழி தமிழ் நிலைத்து நிற்பதற்காக, தன் எதிர்காலச் சந்ததி உரிமை கொண்ட சமூகமாக வாழ்வதற்காக தம்முயிரைத் தியாகம் செய்வதென்பது எங்கும் நடக்கக்கூடியதன்று " - வலம்புரி

மொத்தத்தில்: கூட்டைக் கும்மாளமிட்டுக் குழம்பியவர்களுக்கா உங்கள் ஆதரவு!
பழித்தவன் இழித்தவன் இணைந்த கட்சிக்கு இடாதீர் உங்களது புனிதம் நிகர் புள்ளடிகளை!
சபை குழப்பிகளுக்கு பொல்லடி கொடுங்கள் பணிந்து கேட்டிடினும் புள்ளடி போடாதீர்கள்!
சாவிகொடுக்க ஆடும் பொம்மைகளுக்கு ஆதரவு நல்குவது வீணிலும் வீண் விரயமேயாம்!
யூதாஸ் நிகர் வேடதாரிகளை வேண்டாமென்றே அவர்தம் வீடுகளுக்கே திரும்பிட வேண்டுங்கள்!
வால்பிடிப்போர் வழிகாட்டுவதெப்படி? மக்கள் பணிக்கு பாதுகாப்பு தேடியோடும் நாடகம் எதற்கு?

இஃது:
அகில இலங்கை மாவட்ட ரீதியிலான(Home & Away basis) உதைபந்தாட்டப் போட்டிகளில், யாழ் மாவட்டம் தொடர்ந்தும் வெற்றியீட்டியும், ஐந்தாவது (5) வருடம்(1964) கொழும்பு மாவட்டத்தையும் கூடிய கோல்களை அடித்து இறுதி வெற்றிவாகை சூடி யாழ்க்கொடியை முதலும்-இறுதியுமாக கொழும்பில் ஏற்றிவைத்த உங்கள் முன்னாள் 'ரீம் கப்டன்': **முடியப்பு அல்போன்சஸ் அல்வீன்.**
Post Grad. Dip. in Intl. Affrs.,(SL) Post Grad. Dip. in Plang. & Mangt.,(Cyprus) MABE(Hon) (UK), ACEA (London), Secretarial Studies -Legal (Ca) Poli. Scn. Undergrad.(Major) Concordia Uni.(Ca) Commissioner of Oaths QC& Outside QC (Ca)

**வெகுவிரைவில் எதிர்பாருங்கள்: அல்வீன் மு.இராஜேந்திரன் எழுதிய : 'மாந்தர் படைப்புக் கூறும் ஆதியாகம வரலாற்றுத் தொடக்க நூல்களில், தமிழும், தமிழ் மரபும், பண்பும், முறைமைகளும் ' எனும் நூல் வெளியீட்டினை**

(070)

# ஏமாற்று அரசியல் செய்ய நாங்கள் தயாரில்லை

## ஸ்ரீரங்கேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியத்தை இன்று பேசித் திரிகின்றவர்களே அதனை அவமதிக்கின்றார்கள். உண்மையான தமிழ் தேசப்பற்று எதுவும் இல்லாமல் மக்களிடம் வாக்குகளைப் பெறுவதற்காக "தேசியம்" என்ற புனிதச் சொல்லைத் தமது கட்சிப் பெயர்களில் மட்டும் வைத்துக்கொண்டு வெளிப்படையாகவே மக்களை ஏமாற்றுகின்றார்கள் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளரும் பருத்தித்துறை பிரதேசத்தின் முன்னாள் தவிசாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வலிகாமம் தெற்கு உடுவிலில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்கப் போராடுகின்றவர்கள் நாங்கள் தான். ஒரு தேசத்துக்கு அடிப்படையானவர்கள் அந்த தேசத்தின் மக்கள்.

தமது சொந்த மண்ணை விட்டு மக்கள் புலம்பெயர்ந்து ஓடாமல் தமது தேசத்திலேயே மக்கள் வாழ வேண்டும் என்றால் அவர்களுக்குச் சிறப்பான பொருளாதார வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சொந்த நிலத்தில் மக்கள் வாழ்ந்தால் மட்டுமே தமது நிலத்தையோ தமது கலாசாரத்தையோ தமது மொழியையோ அவர்கள் பாதுகாக்க முடியும். அப்போது தான் அந்த மக்கள் ஒரு தேசமாகவும் வாழ முடியும். அதற்காகத்தான் நாங்கள் போராடுகின்றோம். எமது அரசியல் அதுதான்.

தமிழ்த் தேசியத்தைப் பாதுகாப்பதற்காக வாக்களிக்க வேண்டும் என்றால் தமிழ் மக்கள் எமது கட்சிக்கே வாக்களியுங்கள்.

எமது தேசியத்தின் அழிவடைந்து கொண்டிருக்கும் அடிப்படைகளான - பொருளாதாரம், நிலம், கலாசாரம், மொழி ஆகியவை முதலில் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றைப் பாதுகாத்தாலே எமது மக்கள் வெளிநாடுகளைத் தேடி ஓடாமல் இங்கேயே வாழும் சூழல் உருவாகும். தேசியத்தின் அந்த நான்கு அடிப்படைத் தூண்களையும் பாதுகாப்பதன் ஊடாகவே தமிழ்த் தேசியத்தை பாதுகாத்து நிலைநிறுத்த முடியும்.

எனவே தமிழ் அரசியலின் மாற்றுத் தலைமை என்பது நாங்கள்தான்.

தமிழ்த் தேசியம் என்ற தெய்வீக கோட்பாட்டை முன்னிறுத்தி ஒரு ஏமாற்று அரசியலைச் செய்ய நாங்கள் தயாராக இல்லை. உண்மையாக தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்கப் போராடுகின்ற கட்சி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தான் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# நாட்டின் கடன் சுமை ஒரு ட்ரில்லியனாக அதிகரிப்பு



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் முதல் நான்கு மாதங்களில் நாட்டின் கடன் சுமை கிட்டத்தட்ட ஒரு ட்ரில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, இவ்வளவு குறுகிய காலத்தில் நாட்டின் கடன் ஏன் வானத்தை தொட்டது என்பதை அரசின் தலைவர்கள் விளக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் கடன் மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் கடன் சுமைக்கு இடையிலான விகிதத்தை சுட்டிக்காட்டிய அவர், ராஜபக்ஷ ஆட்சியில் மொத்தக் கடன் சுமை நான்கு மாதங்களுக்குள் ஒரு ட்ரில்லியனாக அதிகரித்துள்ளது என கூறினார்.

இதற்கிடையில், கொரோனா தொற்றின் விளைவாக நாட்டின் கடன் முதன்மையாக உயர்ந்துள்ளதா? என்று ஹர்ஷ டி சில்வாவிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், கொரோனா வைரஸ்க்கு முந்தைய முதல் காலாண்டில் இந்த பிரச்சினை எழுந்தது என்றும், நாடு முடக்கப்படுவதற்கு முன்னர் செய்யப்பட்ட வரி திருத்தங்களுக்கு இது காரணம் என்றும் கூறினார்.

இருப்பினும், கொரோனா வைரஸின் குறைந்தபட்ச விளைவும் இதில் இருந்திருக்கலாம் என்பதை ஏற்றுக்கொண்ட ஹர்ஷ டி சில்வா இந்த பிரச்சினையில் திருத்தம் செய்ய பல வழிகள் இருப்பதாகவும் கூறினார். (ஜ-4)

# சீனா-ரஷ்யாவின் உறவில் விரிசல்

(மொஸ்கோ)

உலகில் சீனாவிற்கு நெருங்கிய நட்பு நாடான ரஷ்யாவிற்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்படத் தொடங்கியுள்ளது.

விளாடிவோஸ்டோக் நகரத்தை சீனா மீண்டும் சொந்தம் கொண்டாடும் விவகாரத்தினால், அதிருப்தி கொண்டுள்ள ரஷ்யா, சீனாவுடனான பல்லாண்டுகால உறவை முறித்துக் கொள்ள தயாராகி வருகிறது.

1600 களில் சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்த விளாடிவோஸ்டோக் நகரத்தை இரண்டாம் ஓபியம் போரில் ரஷ்யா கைப்பற்றியது. இந்த நிலையில், இந்த நகரத்தை சீனா சொந்தம் கொண்டாட தொடங்கியுள்ள நிலையில், இந்த செயலால் ரஷ்யா அதிர்ச்சியடைந்துள்ளது.

இதனால் சீனாவிற்கு அனுப்ப வேண்டிய எஸ்-400 வகை ஏவுகணைகளை அனுப்ப முடியாது என ரஷ்யா மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# வேட்பாளருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர மற்றும் இருவருக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளது.

2015 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கஹவத்த பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பாக இரத்தினபுரி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரேமலால் ஜயசேகர போட்டியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இனவாதிகளை ஒடுக்குவதற்கு எம்மைப் பலப்படுத்த வேண்டும்

## கூட்டமைப்பின் வேட்பாளர் சரவணபவன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இனவாதம் இந்த நாட்டில் இருக்கும் வரையில், இலங்கையின் நிகழ்காலத்தையும் எதிர் காலத்தையும் இனவாதிகள் தீர்மானிக்கும் வரையில் இலங்கைக்கு விமோசனமில்லை.

இனவாதிகளின் கரங்களை ஒடுக்குவதற்கு மக்கள் எம்மைப் பலப்படுத்த வேண்டும் என எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கறுப்பு ஜுலை இனக் கலவரமானது மிகவும் கொடியது. தமிழர் நெஞ்சங்களில் இன்னும் ஆறாத வடுவாக உள்ளது. அது இடம் பெற்று 37 ஆண்டுகள் கடக்கின்ற போதிலும் அது தந்த காயங்கள் எம்மவர்களின் நெஞ்சங்களை விட்டு இன்னும் அகலவில்லை. இந்த நிலையில் தேசிய பௌத்த புத்திஜீவிகள் சங்க சபையின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தேசத்தைக் காத்த இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலுக்குப் பதில் தாக்குதலாக தமிழ் மக்கள் மீது சிங்கள மக்கள் கை வைக்க வேண்டி வந்தது.



தமிழர்கள்வன் முறையை நாடினால் வன்முறை தான் பதில் என்பதற்குக் கறுப்பு ஜுலை சான்று என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடந்த காலமும், நிகழ்காலமும், எதிர் காலமும் இத்தகைய தேரர்களாலேயே தீர்மானிக்கப்பட்டது. தீர்மானிக்கப்படுகின்றது. தீர்மானிக்கப்படும்.

விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு அப்பாவித் தமிழர்களை அரக்கத்தனமாகக் கொன்றொழித்தமை பெருமை பேசும் விடயம் அல்ல.

போர் முடிவுற்ற பின்னர் இன்று தேசியக் கட்சிகள் பலவும் நல்லிணக்கம் என்று வெளிச்சாயம் பூசிக் கொண்டிருக்கையில் இத்தகையவர்களின் கருத்துக்கள் இந்த அரசு இன நல்லிணக்கத்தை எந்த வகையில் பார்க்கின்றது என்பதை ஆழமாகப் படம் போட்டுக் காட்டுகின்றன.

தேசியக் கட்சிகளின் சின்னங்களில் களமிறங்கினால் தமக்குத் தோல்வி கிட்டும் என்று உணர்ந்த அவர்கள் சுயேச்சைகளாகக் களமிறக்கி விடப்பட்டுள்ளனர்.

அவர்களைத் தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டுள்ள தேசியக் கட்சிகளின் வேட்பாளர்களும் தற்போது தம்மை தமிழர்களின் ரட்சகர்கள் போன்று காட்டிக் கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

தமிழ் மக்கள் இந்த விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)



"அன்பான தாயக உறவுகளே!!

ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் சென்று, தமிழர் தரப்பு நியாயங்களை அவர்களுக்கு வலுவான ஆதாரங்களோடு எடுத்துரைத்து சர்வதேச நாடுகளின் ஆதரவை ஈழத்தமிழர்களிற்காக வென்றெடுப்பதில் பெரும் பங்காற்றியவர் சுமந்திரன்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், பிரித்தானிய, கனடிய, அவுஸ்திரேலிய மற்றும் பல நாடுகளின் வெளியுறவு அமைச்சுகள் என முக்கிய தளங்களில் ஈழத் தமிழர் பிரச்சினைகளை முன்னிறுத்திப் பல முக்கிய தீர்மானங்களை தமிழர் தரப்புக்குச் சாதகமாக நிறைவேற்றியதில் வெற்றி கண்டவர் சுமந்திரன்.

இச் செயற்பாடுகளில் சுமந்திரன் புலம்பெயர் தேசங்களில் உள்ள மனித உரிமை மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களையும் இணைத்து அர்ப்பணிப்போடு செயற்பட்டார்.

மிகவும் இக்கட்டான காலகட்டத்தை எதிர்நோக்கியுள்ள ஈழத் தமிழர்களது அரசியல் தீர்வுக்காக ஆற்றல் படைத்த சுமந்திரனுடன் இணைந்து பணியாற்ற கனடியச் செயற்பாட்டாளர்களாகிய நாம் காத்து நிற்கின்றோம்.

எனவே, செயற்திறன் மிக்க சுமந்திரனிற்கு இத் தேர்தலில் பேராதரவு தருமாறு உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்."

கனடிய தமிழர் மனித உரிமை,
அரசியல் செயற்பாட்டாளர்கள்

(C-189)

எம்.ஏ.சுமந்திரன்

அடையாளம் | அறிவாற்றல் | அபிவிருத்தி

x 1

# அரசாங்கத்துடன் இணைந்து ஒற்றையாட்சி அரசியலமைப்பை நிறைவேற்ற முயற்சி

## கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோட்டா அரசாங்கத்துடன் இணைந்து ஒற்றையாட்சி அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கே முயற்சி செய்கின்றது. இது தமிழ் இனத்திற்கு செய்யும் துரோகம்.

இதனை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வவுனியா கலைமகள் விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்த அரசியலமைப்பில் உள்ள விடயங்களை கொண்டு வந்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கத் தயார் எனக் கூட்டமைப்பு கோட்டா அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளது.


ஆகவே மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற விடயம் உறுதி.

தமிழ் இனத்தின் ஆதரவைப் பெற்று வந்த கட்சி சரித்திரத்தில் முதல் தடவையாக ஒரு அரசியலமைப்பு சீர்திருத்தத்தைத் கொண்டு வருவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்பு மூன்றாவது அரசியலமைப்பாக அது வர இருக்கிறது.

இந்த நாட்டில் பயங்கரவாத பிரச்சினை தான் இருந்தது. அது தற்போது முடிந்து விட்டது. இங்கு பிரச்சினை இல்லை என அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் தெரிவித்தது. ஆனால் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள வில்லை.

ஏனெனில் இந்த நாட்டில் அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் இந்த நாட்டில் பிரச்சனை உள்ளது. அதனை தீருங்கள் என்றனர். நாட்டில் இருக்கும் குறிப்பிட்ட ஒரு மக்கள் அரசியலமைப்பை ஏற்காவிடின்



அந்த நாட்டில் இனப்பிரச்சினை இருக்கு. அது தீர்க்கப்பட வேண்டும்.

இந்தப் பின்னணியில் எமது பிரதிநிதிகள் என்று சொல்பவர்கள் தேர்தலுக்கு பின் புதிய அரசியலமைப்பை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் அது தமிழ் சரித்திரத்தில் ஒரு திருப்பு முனையாக அமையப்போகிறது.

தமிழர் தரப்பின் ஆதரவோடு அது நிறைவேற்றப்படுமாக இருந்தால் அதற்கு பின் இந்த நாட்டில் தமிழர்களுக்கு இனப்பிரச்சினை உள்ளது என்று கூற முடியாது.

அதனால் மக்களுக்கு தார்மீகக் கடமை இருக்கிறது. அந்த புதிய அரசியலமைப்பை தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் உள்ளதா? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

உண்மையில் அதில் பிரச்சினையை தீர்க்க வழிவகை இருந்தால் ஆதரிப்பதில் தவறு இல்லை.

ஆனால் அது ஒற்றையாட்சி அரசியலமைப்பு. வார்த்தை ஞாலங்களை கூறுகிறார்கள்.

அந்த இடைக்கால அறிக்கையில் உள்ள அம்சங்கள் தமிழ் மக்களின் உரிமைகள், கொள்கைகள் என்பவற்றை உதாசீனம் செய்து தமிழ் மக்களுக்கு துரோகம் செய்யும் வகையில் உள்ளது.

அதனை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் இந்த இனத்திற்கு செய்யும் பெரிய துரோகம்.

கடந்த 72 வருடங்களாக நிராகரித்த அரசியலமைப்பை ஆதரிக்கச்சதி செய்கிறார்கள். அதில் பௌத்தத்திற்கு முன்னுரிமை. அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கப் போகிறது.

அதனால் இம்முறை மக்கள் விழிப்பாக இருந்து எமக்கு வாக்களிக்கவும். நாம் கடந்த 10 வருடங்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தவறுகளை சுட்டிக்காட்டி வருகின்றோம்.

போர் முடிவடைந்து 8 மா[illegible]ங்களில் 2010 ஆம் ஆண்[illegible] தேர்தலில் தமிழ்த் தேசிய[illegible] கூட்டமைப்பு பிழையாக போ[illegible]ன்றது என்று தெரிவித்து த[illegible]த்து வந்தோம்.

தனித்து வந்தால் தோ[illegible] போம் எனத் தெரிந்தும் நா[illegible] எமது மக்களுக்காக வெளியி[illegible] வந்து கடந்த 10 வருடங்க[illegible] கூட்டமைப்பின் தவறுக[illegible] சுட்டிக்காட்டி பாதிக்கப்ப[illegible] மக்களின் குரலாக இருக்கி[illegible]றோம். இதனால் நாம் தான் [illegible]டமைப்பின் மாற்று.


எனவே எமக்கு தான் [illegible]கள் வாக்களிக்க வேண்[illegible] என அவர் மேலும் தெரிவி[illegible]தார்.

(ஜ-2-250[illegible]

# சஹ்ரானுக்கு சாதகமாக மாறிய சிங்கள - முஸ்லிம் மக்களின் பிளவு

(கொழும்பு)

**யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர், இந்நாட்டின் சமூகம் சிங்களம் - முஸ்லிம் என பிளவுபட்டது. இந்தப் பிளவினை சஹ்ரான் ஹாசிம் தனக்கு சாதகமாக வளைத்துப் பயன்படுத்திக்கொண்டார் என அரச உளவுச் சேவையின் முன்னாள் பணிப்பாளரும் தற்போதைய கிழக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான நிலந்த ஜயவர்தன தெரிவித்தார்.**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் முன்னிலையில், 256 ஆவது சாட்சியாளராக கடந்த 27 திங்கள் முதல் சாட்சியளித்துவரும் நிலையில் நேற்று முன்தினம் நான்காவது நாளாகவும் அவரது சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

இரு சமூகங்களையும் பிளவுபடுத்தும் வெறுப்புப் பேச்சுக்கள் இணையம் ஊடாக பரவலடைந்ததாகவும், அது மத நல்லிணக்கத்தை கடுமையாக பாதித்ததுடன், அது கூட சர்வதேச பயங்கரவாதம் நாட்டுக்குள் வர ஏதுவானதாக அமைந்திருக்கலாம் என. அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் சிங்கள,முஸ்லிம் இரு தரப்புக்களில் இருந்தும் எதிரெதிரான 150 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் அப்போது பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும், அனைத்து மதங்களையும் உள்ளடக்கும் வண்ணமாக தேசிய கட்டமைப்பொன்றினை உருவாக்குமாறு தான் ஆரம்பத்திலேயே அதிகாரிகளிடம் கோரியதாகவும் நிலந்த ஜயவர்தன குறிப்பிட்டார். (ஜ-4)

# ஒரு அலகு ரூ.10 வீதம் சூரிய சக்தி மின்சாரம் கொள்வனவு



(கொழும்பு)

குறைந்த விலைக்கு சூரிய சக்தி மின்சாரம் கொள்வனவு செய்ததால் மின்சார சபைக்கு 2 ஆயிரத்து 737 மில்லியன் ரூபா இலாபம் கிடைத்ததாக மின்சக்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில் ஒரு அலகு 10 ரூபா வீதம் 150 மெகா வோள்ட்ஸ் சூரியசக்தி மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டது.

குறைந்த விலையில் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து இவ்வாறு மின்சாரம் பெறப்பட்டுள்ளது. ஒரு மெகா வோள்ட்ஸ் மின்சாரம் கொள்வனவு மூலம் 50 ஆயிரம் ரூபா சேமிக்க முடிந்துள்ளது. நாளாந்தம் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா சேமிக்க முடிந்துள்ளது.

இதனூடாக வருடாந்தம் 2 ஆயிரத்து 737 மில்லியன் ரூபா இலாபமீட்ட முடியும். நான்காம் காலாண்டில் மேலும் 15 மெகா வோள்ட்ஸ் மின்சாரம் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

நட்டத்தில் இயங்கும் மின்சார சபை 2023 ஆம் ஆண்டில் இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சகல அரச நிறுவனங்களையும் இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதே அரசின் இலக்காகும் என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# வாக்கு எண்ணும் நிலையங்களில் சி.சி.ரி.வி.கமராக்களை பொருத்துங்கள்

## சுதந்திரக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

வாக்கு எண்ணும் நிலையங்கள் அனைத்திலும் சி.சி.ரி.வி. கமராக்களை பொருத்துமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் கோரிக்கை விடுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

இந்த கோரிக்கை அடங்கிய கடிதத்தை இன்று அல்லது நாளை அனுப்பி வைக்க உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் பந்துலால் வெள்ளால தெரிவித்துள்ளார்.

இப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டால், வாக்கு எண்ணும் நிலையங்களில் எவ்வித சிக்கலான நிலைமைகளும் ஏற்பட வாய்ப்பிருக்காது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனிடையே வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு செல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்வதற் காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக சுதந்திரக் கட்சியின் உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறைவேற்றுச் சபையே இது குறித்து தீர்மானத்தை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (ஜ-4)




## நல்லாட்சி புரிகின்ற நல்லூரான்

ஆறுமுகங் கொண்டு நமை ஆழ்பவன்
ஆறுபடை வீடு தனில் உறைபவன்
வேல் கொண்டு வினையாவும் தீர்ப்பவன்
மயில் ஏறி நமையாவும் காப்பவன்
ஓம் எனும் பிரணவத்தில் ஒலிப்பவன்
ஓங்காரமாய் பிரம்மனையே எதிர்த்தவன்
நல்லை எனும் நகரிலே உதித்தவன்
நல்லாட்சி தனை புரியவே வந்தவன்

லிங்கேஸ்வரன் ஜனார்த்தன்,
மறவன்புலோ மத்தி.

## அற்புதக் கந்தனே வருக

அப்பனே முருகா அற்புதக் கடவுளே
அழகின் பொருளே அன்பின் வடிவே
அன்னை தமிழை அளிக்கும் இறையே
அடிமையில்லா வாழ்வு தந்திடும் ஐயனே

நல்லூர்க் கந்தனே ஆறுமுகக் கடவுளே
நாளும் என்னை ஆளும் மயில்வாகனனே
நிலையில்லா வாழ்வில் நிம்மதி தருவோனே
நித்தம் உன்னை தொழுகிறேன் வேலாயுதனே

அரியாலையூர் கு.பிரதீபன்.

## சக்தி வடிவேலன்

ஆதிமூலமதில் நல்லை சக்தி
வடிவேலன் கந்தனவன்
ஆதிவடிவேலதாய் அருள் ஒளிவீசி
எழுந்தருளி உள்ளான்
சக்தி வடிவேலனைப் பார்க்க
கண்கள் கோடி வேண்டுமே
சக்திபெருக்கோட பார்த்து துதிக்க
பக்தி பரவசம் ஓங்குதையா
வேலனைப் பார்க்காது இருக்க
முடியலையே திரும்பிவர மனமில்லையே
வேலவர்க்கு அபிஷேகம் பூசைக்கு
என்ன குறைவு உண்டோ
நேரம் போனாலும் பூசைநேரம்
தவறாமல் நடக்குதையா
நேரம் பார்த்து பிந்தாமல் போய்
பூசை கண்டு வணங்கலாமே
கூரிய வடிவேல் கடிய கொடிய
கொரோனாவை கொன்று
கூரிய வடிவேலால் எம்மை
காத்திடுவான் பாரீர்.

கலாபூஷணம் திருமுருகன்
ந.சிவசுப்பிரமணியம் நீர்வேலி.

## சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

வள்ளி யன்று தவத்தில் நின்று
வள்ள லுன்னைக் கொள்ளவே
கள்ள வேடம் நள்ளி யெள்ளிக்
கதைகள் பலவும் சாற்றியே
உள்ளந் தன்னைக் கொள்ளை கொண்டுன்
உடைமை யாக மாற்றியே
தெள்ளி வாழ்வு அள்ளித் தந்த
தேவன் நல்லைக் கந்தனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்.
நவ.பாலகோபால்

# எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும்



(கொழும்பு)

கட்சிகள் இணைந்த கூட்டணியால் கிடைக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வர முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முழுமையான அரசியலமைப்பு உருவாக்க தேவையான உரையாடலை கட்டியெழுப்ப மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசியலமைப்புச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது.

நாட்டுக்கு கெடுதியான சில உடன்படிக்கைகளை தோற்கடிக்க எமக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுகிறது.

கட்சிகள் இணைந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற முடியாது. 19 ஆவது திருத்தச் சட்டத்தை கட்சிகள் இணைத்துக்கொண்டு வந்தன.

இறுதி நேரத்திலும் அதில் மாற்றங்களை செய்தனர். இந்த திருத்தச் சட்டம் நல்லதா? கெட்டதா? என்ற விடயமல்ல. அதனைக் கொண்டு வந்தவர்கள் எதிர்பார்த்த எதுவும் அதில் இல்லை.

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதித் தேர்தலிலும் வெளிநாட்டு பிரஜா உரிமையைக் கொண்டிருந்த கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் தேர்தலில் போட்டியிட முடியாதபடியான தீர்மானங்கள் மாத்திரமே அதில் உள்ளன.

கட்சிகள் இணைந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாது என்ற நிலைமையை நாம் நாட்டின் வரலாற்றில் கண்டுள்ளோம். மக்களை மையமாகக்கொண்ட அரசியலமைப்புச் சட்டமே நாட்டுக்கு தேவை.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலமின்றி வழங்கப்பட்ட வாக்குறுதிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது. நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதுகாக்க வேண்டுமாயின் எமக்கு வலுவான நாடாளுமன்றம் அவசியம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## ரியாலிட்டி ஷோவிற்கு சிறுவர்களைப் பயன்படுத்தத்தடை

(கொழும்பு)

தொலைக்காட்சி ரியாலிட்டி ஷோக்கள், விளம்பரங்கள் மற்றும் விளம்பரங்களுக்கு குரல் கொடுப்பது போன்றவற்றில் சிறுவர்களைப் பயன்படுத்துவது தொடர்பில் கடுமையான வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் 13 வயதுக்குட்பட்ட சிறுவர்களை தொலைக்காட்சி ரியாலிட்டி ஷோக்களுக்கு பயன்படுத்துவதை தடை செய்வது தொடர்பில் எதிர்காலத்தில் வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்படும் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கலாநிதி முதித்த விதான பத்திரன தெரிவித்தார்.

இந்த அறிவிப்பின்படி நாட்டிலுள்ள அனைத்துத் தொலைக்காட்சி அலைவரிசைகளும் வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்க வேண்டியிருக்கும் என்றும், அவ்வாறு இணங்கத் தவறும் அலைவரிசைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொலைக்காட்சி ரியாலிட்டி ஷோக்களுக்குப் பயன்படுத்தப்படும் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்வது குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு சபைக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. (ஜ-4)

## சுற்றிவளைப்பில் 4981 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் குற்றச் செயல்களை தடுக்கும் நோக்கில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 4 ஆயிரத்து தொள்ளாயிரத்து 81 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி முதல் நேற்று வரையான காலப்பகுதியிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆயிரத்து 866 பேரும் கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்த ஆயிரத்து 104 பேரும் ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் 71 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை வெடி பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 பேரும் சட்டவிரோத மதுபானங்களுடன் இரண் டாயிரத்து 290 பேரும் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின் றனர்.

அத்துடன் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இரண்டாயிரத்து 435 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஜ-4)







# இராசிபலன்

**01.08.2020**
**ஆடி 17, சனிக்கிழமை**
**திரயோதசி முன்னிரவு 10.35 மணிவரை**
**மூலம் முற்பகல் 8.16 மணிவரை**
**சுபநேரம் 3.03-4.33 மணிவரை**
**இராகுகாலம் 9.03-10.33 மணிவரை**
**சந்திராஷ்டமம் ரோகினி**
**சனிப்பிரதோச விரதம்**

**வளவன்**


மேஷம்

தொழில் ரீதியாக ஏற்பட்ட மறைமுக எதிர்ப்புக்களைச் சமாளிப்பீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


ரிஷபம்

கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலையேற்படலாம்.


மிதுனம்

பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சகமுண்டு.


கடகம்

உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.


சிம்மம்

உள்ளம் மகிழும் சம்பவம் இல்லத்தில் இடம்பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.


கன்னி

பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.


துலாம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள்.


விருச்சிகம்

குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.


தனுசு

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை கூடும், சிந்தனை மிகுதியான நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.


மகரம்

பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சோம்பலை விலக்குவது நல்லது, சுப விரயங்கள் கூடும் நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம்.


கும்பம்

பொதுவாழ்வில் பாராட்டும், புகழும் கூடும் நாள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.


மீனம்

உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

வாழ்க்கை உன்னைச் சுமையாக நினைப்பதில்லை

# தனித்து ஆட்சியமைப்பதே ஐ.தே.கவின் இலக்கு



(கொழும்பு)

ஆட்சியமைத்து குறுகிய காலத்தில் தோல்வி கண்டுள்ள அரசாங்கத்துடன் டீல் வைத்துக் கொள்ள வேண்டிய தேவை ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடையாது. தனித்துவ அரசாங்கத்தை கைப்பற்றி சிறந்த நிர்வாகத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காகவே புதிய இளம் தலைமுறையினரை களமிறக்கியுள்ளோம். வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை எம்மால் மாத்திரமே மீளக் கட்டியெழுப்ப முடியும் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், மத்திய கலாசார நிதியத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக பிரதமர் மகிந்தராஜபக்ஷ நியமித்த குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளது கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராக நான் பதவி வகித்த காலத்தில் கலாசார நிதியத்தில் எவ்வித நிதி மோசடிகளும் இடம்பெறவில்லை.

நிதியத்தை பொறுப்பேற்கும் போது நிலையான வைப்பில் 300 மில்லியன் நிதி காணப்பட்டது. கலாசார அலுவல்கள் அமைச்சினை பிறிதொரு தரப்பினருக்கு வழங்கும் போது நிதியத்தின் வைப்பில் 4.5 பில்லியன் நிதி சேமிக்கப்பட்டிருந்தது. மத்திய கலாசார நிதியத்திற்கு வருவாயை அதிகரிப்பதற்கும், செலவுகளை குறைப்பதற்கும் முறையான திட்டங்கள் வகுக்கப்பட்டன.

நிதியத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ சபையின் அனுமதியுடன் அனைத்து தீர்மானங்களும் முன்னெடுக்கப்பட்டன. சசுனோதய திட்டத்தின் கீழ் குறைந்த வருமானங்களைக் கொண்ட 1500 விகாரைகளுக்கு குறித்த பிரதேச சபையின் ஊடாக 5 இலட்சம் அபிவிருத்தி நிதி வழங்கப்பட்டது. அத்துடன், புராதன குளங்கள் மற்றும் தொல்பொருள் மரபுரிமைகள் ஆகியவற்றை பாதுகாப்பதற்கும், அதனூடாக பயன் பெறுவதற்கும் சர்வதேச தரத்திலான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

ஆகவே எனது பொறுப்பில் இருந்தபோது, நிதியத்தில் எவ்வித முறைகேடுகளும் இடம்பெறவில்லை என்பதை உறுதியாக குறிப்பிட வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கழுகு



(கொழும்பு)

பாதாள உலகக் குழுவின் தலைவரான அங்கொட லொக்கா போதைப் பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் கழுகு ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. மீகொட பகுதியில் உள்ள ஒரு கோழிப் பண்ணையிலிருந்து குறித்த கழுகு கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

பண்ணையின் உரிமையாளர் மற்றும் மற்றொரு நபர் விமான துப்பாக்கி மற்றும் 10 தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாண பொலிஸ் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் நடத்திய சோதனையின் போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் கடத்தலுக்கு கழுகை பயன்படுத்தும் சம்பவம் சினிமாவை மிஞ்சியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை அங்கொட லொக்கா இந்தியாவில் கொலை செய்யப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எங்கள் இதயங்களில் இருக்கிறது

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்திற்கு கொண்டு வந்து மக்கள் எதிர்பார்த்த விடயங்களை நிறைவேற்ற பெரும்பான்மை பலத்துடன் கூடிய நாடாளுமன்றத்தை உருவாக்க வேண்டும் என பிரதமரும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பண்டாரநாயக்க, டி.ஏ. ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து ஆரம்பித்த கட்சி. எமது இதயங்களில் இருக்கும் கட்சி. எனினும் எங்களை கட்சியில் இருந்து விரட்டிய பின்னர் புதிய கட்சியை ஆரம்பிக்க நேரிட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டுமாயின் நாடாளுமன்றத்தின் பலம் எங்களிடம் இருக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருந்தால் மாத்திரமே அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றி எங்களால் வேலை செய்ய முடியும் என அவர் தெரிவித்தார். (ஐ-4)

## பயங்கரவாதிகளின் தாக்குதலில் இந்திய வீரர்கள் மூவர் உயிரிழப்பு



(மியன்மார்)

மணிப்பூர் மியன்மார் எல்லை அருகே பயங்கரவாத குழுவினர் நடத்திய தாக்குதலில் இந்திய வீரர்கள் 3 பேர் உயிரிழந்தனர்.

மணிப்பூர் மாநிலம் சந்தல் மாவட்டத்தில் மியன்மார் எல்லையை அண்மித்த பகுதியில் அசாம் ரைபிள்ஸ் படைப் பிரிவைச் சேர்ந்த வீரர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது பயங்கரவாதிகள் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடியில் வீரர்களின் வாகனம் சிக்கியது.

இந்தத் திடீர் தாக்குதலால் நிலைகுலைந்த வீரர்கள் சுதாகரிப்பதற்குள், அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்த தாக்குதலில் 3 வீரர்கள் உயிரிழந்துள்ளதுடன், 4 பேர் பலத்த காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதிக்கு பாதுகாப்பு படையினர் விரைந்துள்ளனர். உள்ளூர் பயங்கரவாத குழுக்கள் இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (2)

## விமானம் இயக்குவதில் தாத்தாவின் சாதனையை முறியடித்த பாட்டி

### 99 வயதில் கின்னஸ் சாதனை



(வோஷிங்டன்)

ரோபினா ஆஸ்தி என்ற 99 வயது பாட்டி உலகின் மிக வயதான விமான பயிற்றுவிப்பாளராகவும் விமானியாகவும் தனது நிலையை உறுதிப்படுத்தி இருக்கிறார். இது கின்னஸ் சாதனையாக அமைந்துள்ளது.

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் ரிவர்சைட் என்ற இடத்தில் ரோபினா ஆஸ்தி என்ற 99 வயது பாட்டி, விமானம் ஓட்டுவது தொடர்பான பாடத்தை பல்லாண்டு காலமாக கற்பித்து வந்தார். இவர் விமான ஓட்டிகளுக்கான பயிற்றுவிப்பாளராகத் தனது கடைசிப் பாடத்தை இப்போது நடத்தி முடித்துள்ளார்.

அப்போது அவர் விமானத்தை இயக்கியும் காட்டி உள்ளார். இதன்மூலம் உலகின் மிக வயதான விமான பயிற்றுவிப்பாளராகவும் விமானியாகவும் தனது நிலையை உறுதிப்படுத்தி இருக்கிறார். இது கின்னஸ் சாதனையாக அமைந்துள்ளது.

இதற்கு முன்பு அமெரிக்காவின் அயோவா மாகாணத்தை சேர்ந்த 98 வயதான ஆண் தான் உலகின் வயதான விமானப் பயிற்றுவிப்பாளர், விமானி என்ற சாதனையை வைத்திருந்தார். அந்த சாதனையை இப்போது ரோபினா ஆஸ்தி முறியடித்துள்ளார். அவரை அவரது மாணவர்கள் பாராட்டினர். (2)

## இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 16 இலட்சத்தைக் கடந்தது

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் நேற்று முன்தினம் ஒரேநாளில் புதிய உச்சமாக 54 ஆயிரத்து 966 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 783 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 16 இலட்சத்து 39 ஆயிரத்து 350 ஆக உயர்வடைந்துள்ளதுடன், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 35 ஆயிரத்து 786 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## பேருந்து-லொறி விபத்து 7 பேர் பலி, 8பேர் காயம்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் கிரிமியா பகுதியில் பேருந்து லொறி மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதில் ஏழு பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்றுக் காலை 6.40 மணிக்கு பெலோகோர்ஸ்க் நகருக்கு அருகே இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 8 பேர் காயமடைந்துள்ளதாக ரஷ்ய அவசர அமைச்சகத்தின் பிராந்திய திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. (2)

நாடாளுமன்றத் தேர்தல் 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
நம்பிக்கையான எதிர்காலத்திற்கு..!
அரசியல் உரிமைக்கான...
அபிவிருத்திக்கான...
அன்றாடப் பிரச்சினைக்கான தீர்வுக்கு

X

5
டக்ளஸ் தேவானந்தா
செயலாளர் நாயகம் - (ஈ.பி.டி.பி)
(சி. 215)
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - (ஈ.பி.டி.பி)

# ஆப்கானில் குண்டுத் தாக்குதல்; 40 இற்கும் அதிகமானோர் பலி



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட கார் வெடிகுண்டுத் தாக்குதலில் 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த 19 ஆண்டுகளாக அந்த நாட்டு அரசுக்கும் தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே உள்நாட்டு போர் நடந்து வருகிறது. இந்தப் போர் தொடங்கியதில் இருந்தே ஆப்கானிஸ் தான் அரச படைக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்பட்டு வந்தது.

இதற்கிடையே, போரை நிறுத்த தலிபான் பயங்கரவாதிகளுடன் அமெரிக்கா அமைதி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. இதில், கடந்த பெப்ரவரி மாத இறுதியில் தலிபான் பயங்கரவாத அமைப்பு மற்றும் அமெரிக்க அரசுக்கு இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி, இந்த மாத இறுதிக்குள் தனது படைவீரர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் நாட்டின் மத்திய லோகார் மாகாணத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த கார் ஒன்றில் இருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்றை மர்ம நபர்கள் வெடிக்க செய்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 40 இற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். பலர் காயமடைந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு உடனடியாகச் சென்று காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இந்தச் சம்பவத்திற்கு உடனடியாக எந்தப் பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (2)


பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி



சிவாஜிலிங்கம் க.வி.விக்னேஸ்வரன் சிறீகாந்தா



※ இனப் படுகொலை செய்தோரைத் தோற்கடிப்போம்!
※ இனப் படுகொலை செய்த இலங்கை அரசுக்கு 2 தடவைகள் காலநீடிப்பைப் பெற்றுக் கொடுத்தோரையும் தோற்கடிப்போம் !!
※ தமிழ் இனத்திற்கு நீதி கிடைக்க வாக்களிப்போம் !!!

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

• தேசியம் • தாயகம் • சுயநிர்ணய உரிமை

சிவாஜிலிங்கம் : தொ.பே. 0777729020
facebook.com/ எம்.கே.சிவாஜிலிங்கம்

(091)


# தீவிரவாதிகள் ஊடுருவ உள்ளதாக உளவுத்துறை எச்சரிக்கை

(காஷ்மீர்)

இந்தியாவிற்குள் பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவ தயார் நிலையில் இருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜம்மு - காஷ்மீர் எல்லை வழியாக சுமார் 320 தீவிரவாதிகள் இவ்வாறு ஊடுருவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் இதற்காக எல்லையில் 27 சிறப்பு தளங்கள் அமைக்கப்பட்டு உள்ளதாகவும் உளவுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

எல்லைப் பகுதியில் நடைபெறும் தகவல் பரிமாற்றங்களை றோ பிரிவு உளவுத்துறையினர் இடைமறித்துக் கேட்டதன் மூலம் இந்தத் தகவல் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

ஈகைத்திருநாள், ரக்சா பந்தன் மற்றும் சுதந்திர தினம் போன்ற தேசிய அளவிலான பண்டிகைகள் அடுத்தடுத்து கொண்டாடப்பட உள்ள நிலையில் உளவுத்துறையினரின் இந்த எச்சரிக்கை மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)


பாராளுமன்றத் தேர்தல் - 2020
வீணைக்கு வாக்களிப்போம்



மக்களைக் கைவிட்டு எங்கும் ஓடாமல்
மக்களின் துயர் துடைத்தவர் யார்...?
அழிந்து போன எம் தேசத்தை
அபிவிருத்தியால் தூக்கி நிறுத்தியவர் யார்...?
நடைமுறை யதார்த்த வழி நின்று
தமிழர் அரசியல் உரிமைக்காக
அயராது உழைப்பவர் யார்...? அது
மக்களின் தலைவர்
டக்ளஸ் தேவானந்தா...!



X

(சி-214)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) யாழ்.சமூகம்


# தாய்வானின் ஜனநாயகத்தின் தந்தை உயிரிழந்தார்

(தாய்பே)

தாய்வான் முன்னாள் ஜனாதிபதியும் தாய்வான் ஜனநாயகத்தின் தந்தை என்றும் கருதப்படும் லீ டெங் - ஹீய் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தனது 97 ஆவது வயதில் காலமானார்.

செப்டிக் அதிர்ச்சி மற்றும் பல உறுப்பு செயலிழப்புக் காரணமாக உயிரிழந்தார்.

அவர் 1988 முதல் 2000 வரை தாய்வானின் ஜனாதிபதியாகப் பணியாற்றினார். அவர் 1988 இல் ஜனாதிபதியானார். அவர் ஜனாதிபதியாக இருந்தபோது ஜனநாயக வளர்ச்சிக்குத் தடையாக இருந்த சட்டங்களிலிருந்து விடுபட்டார், சட்டமன்றத்தை மாற்றியமைத்தார், இலவச சட்டமன்றத் தேர்தல்களை நடத்தினார், ஜனாதிபதி பதவிக்கு பின்னர் லீ பொது



நிதியை மோசடி செய்த குற்றச்சாட்டில் குற்றம் சாட்டப்பட்டார். எனினும் சாட்சியங்கள் ஏதுமில்லாத காரணத்தால் விடுவிக்கப்பட்டார். (2-8)




## அசலும்- போலியும்

ஒருநாள் மாறுவேடத்தில் மன்னர் அக்பரும், பீர்பாலும் நகர்வலம் வந்தனர். அச்சமயம் நடக்க முடியாதவர்களும், பார்வையற்றவர்களும் வீதியில் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தனர்.

இக்காட்சியைக் கண்ட அக்பரின் மனம் வேதனையடைந்தது. அதனால், பீர்பால், மன்னர் அவர்களே, ஊனமுற்ற இவர்களுக்கு நாம் ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்றார்.

ஊனமுற்றவர்கள் பிச்சை எடுப்பது என்பது ஒரு கொடுமையான செயலாகும். ஊனமுற்றவர்களாகப் பிறந்தது அவர்களது குற்றம் இல்லை. செய்யாத குற்றத்திற்கு ஆண்டவன் அளித்த தண்டனையாகும்.

ஆண்டவனுக்கு ஒப்பான அரசர் இதற்கு பரிகாரம் செய்வது நல்லதுதான் என்றார் பீர்பால். இவர்களுக்கு என்ன செய்யலாம்? என வினவினார் மன்னர்.

இவர்களுக்கு உணவை நாமே அளித்தால் அவர்கள் பிச்சை எடுக்கமாட்டார்கள் என்றார் பீர்பால். பீர்பால் கூறிய யோசனை மன்னருக்கு சரியாகப் பட்டமையினால் மறுநாளே ஊனமுற்ற எல் லோருக்கும் இலவசமாக உணவு அளிக்கப்பட்டது.


இது நல்ல திட்டம் என்றாலும் சில சோம்பேறிகள் உடல் ஊனமுற்றவர்கள் போன்று நடித்து இலவச உணவை வாங்கி உண்பது அதிகமானது.

இதனால் நாட்டிலுள்ள சோம்பேறிகள் கூட்டம் நாளுக்கு நாள் இலவச உணவை வாங்கிச் செல்ல வந்தமையினால் அரசாங்கத்திலுள்ள உணவு களஞ்சியமே காலியாகி நிலைமை மோசமாகி விட்டது.

இதனை தடுத்திட நல்ல யோசனை ஒன்றை கூறிட அக்பர் பீர்பாலிடம் கேட்டார். மன்னர் பெருமானே, இதற்காகக் கவலைப்படுவதை நிறுத்துங்கள். இதற்கான முடிவை நான் செய்கிறேன் என்றார் பீர்பால்.

மறுநாள் ஊனமுற்றவர்களுக்காக இலவச உணவு வழங்கும் இடத்திற்கு சென்றார். பீர்பால் கூறியபடி இலவச உணவு வழங்கும் நேரம் தாமதப்படு த்தப்பட்டது.

இதனால் இலவச உணவு வாங்க காத்திருந்தவர்களிடையே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. அச்சமயம் ஒரு அரசு அதிகாரி அங்கே வந்தார். எதற்காக கூச்சலிடுகின்றீர்கள்? இன்று முதல் இலவச உணவு



வழங்கும் இடம் அடுத்த தெருவிலுள்ள பெரிய சத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போது உணவு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் உடனடியாகச் செல்பவர்களுக்கு இப்போதே உணவு கிடைக்கும் என்றார்.

அரசு அதிகாரி கூறியதைக் கேட்டதும் சற்றும் யோசனை செய்யாமல் ஊனமுற்றவர்கள் போன்று போலியாக நடித்தவர்கள் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு சத்திரத்தை நோக்கி ஓடினார்கள். ஆனால் உண்மையில் ஊனமுற்ற பார்வையற்றவர்கள், கை-கால்களை இழந்தவர்கள் அந்த இடத்திற்குச் செல்வதற்கு துணையில்லாமல் தவித்தனர்.

உண்மையான ஊனமுற்றவர்கள் தவிப்பதைக் கண்ட பீர்பால் உடனடியாக அவர்களுக்கு உணவு வழங்குமாறு கட்டளையிட்டார். அவர்களும், சந்தோஷத்துடன் உணவருந்திச் சென்றனர்.

இந்த விடயத்தைக் கேள்விப்பட்ட போலியானவர்கள் மீண்டும் பழைய இடத்தை நோக்கி வந்தனர். உணவளிக்கும் மேலதிகாரி அவர்களை எச்ச ரித்து போலியான நீங்கள் மீண்டும் வந்தால் கைது செய்து சிறைக்கு அனுப்பப்படுவீர்கள் என்றார்.

அன்று முதல் உண்மையான ஊனமுற்றவர்கள் மட்டுமே வந்து உணவருந்திச் சென்றனர். போலியானவர்கள் காணாமல் போயினர். பீர்பாலின் அறிவு நுணுக்கத்தை புகழ்ந்து பாராட்டினார் மன்னர் அக்பர்.

**நீதி: உண்மையை யாராலும் மறைக்க முடியாது.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்

**(24)**

ராஜராஜசோழனின் முதல் போர் வெற்றி குறித்துத் திருவாலங்காட்டுச் செப்புப்பட்டயம் இவ்வாறு கூறுகிறது.

'தென்திசை நோக்கிய திக் விஜயம். பாண்டிய மன்னன் அமரபுஜங்களை வென்று கடலினையே அகழியாகக் கொண்டதும் சுடர்விடுகின்ற மதில்களுடன் கூடியதும் வெற்றித் திருவின் உறைவிடமும் எதிரிகளால் . புகமுடியாததுமாகிய விழிஞத்தை வென்றார்'

ராஜராஜசோழனின் மெய்கீர்த்திகள் (பட்டங்களில்) முக்கியமானது, காந்தளூர்ச்சாலை கலமறுத்தளி என்ற புகழ்மொழி. ராஜராஜனின் நான்காவது ஆட்சி ஆண்டிலிருந்து (கி.பி. 988) இந்த அடைமொழி சோழர் காலத்து கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.

காந்தளூர்ச்சாலை கலமறுத்தளிய கோராஜ கேசரி வன்மரான ஸ்ரீராஜ ராஜ தேவன் காந்தளூர்ச் சாலை கலமறுத்தளி ஸ்ரீ ராஜராஜ தேவன் என்று ராஜராஜன் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறார்.



காந்தளூர்ச்சாலை

ராஜராஜன் தன் ஆட்சிக் காலத்தில் நான்காம் ஆண்டில் மேற்கொண்ட காந்தளூர்ச்சாலை கடற்போரே அவருடைய முதல் வெற்றியாகும். ஆனால், காந்தளூர்ச்சாலையையோ அல்லது சேர நாட்டையோ தாக்கி சோழமடியில் கிடத்த வேண்டும் என்பது ராஜராஜனின் திட்டமல்ல.

காந்தளூர் என்று மட்டுமல்ல, வேறு எந்தப் போரையும் நாடு பிடிக்கும் ஆசையில் அவர் நிகழ்த்தி விடவில்லை. பிறகு ஏன் போர் புரிந்தார்?

ராஜராஜனின் முத்திரைகளாக இருக்கும் எந்தப் புகழ்பெற்ற போரும் அவை நிகழ்ந்திருக்காவிட்டால் ராஜராஜனின் ஆட்சி மட்டுமல்ல, சோழ சாம்ராஜ்ஜியமே உடனே கவிழ்ந்திருக்கும். அப்படிப்பட்ட நெருக்கடி நேரத்தில் தான் தன் படையை முடுக்கிவிடுவார்.

நாட்டைப் பாதுகாக்க, தன் நண்பர்களைக் காக்க, தமக்கு எதிராக சூழ்ச்சியில் ஈடுபடுபவர்களிடம் இருந்து தப்பிக்க, தடையில்லாத கடல்வழி வாணிபத்திற்காக என்பன போன்ற தற்காப்புக் காரணங்கள் தான் எல்லாப் போர்களுக்கும் காரணமாக அமைந்தன.

தற்காப்பு நடவடிக்கைகளும் எதிர்வினைகளுமே ராஜராஜனின் தாக்குதல்களாக மாறிவிட்டன.

ராஜராஜனின் முக்கிய வெற்றிகளில் ஒன்றாகக் கருதப்படும் காந்தளூர்சாலைப் போர், சமாதான நடவடிக்கையாகத்தான் முதலில் ஆரம்பித்தது.

ராஜராஜனின் ஆணைப்படி, சமாதானம் பேச வந்த வீரர்களுக்கு சேர மன்னன் தேநீர் விருந்தளித்து மரியாதை செலுத்தியிருந்தால் ராஜராஜன் வழக்கம் போல ஏரி வெட்டப் போயிருப்பார்.

(தொடரும்)

# நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் உண்டு

06



நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கின் முதலமைச்சராக இருந்ததன் காரணமாகவே; இலங்கையில் நடந்தது தமிழ் இன அழிப்பு என்ற தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது.

தமிழின அழிப்பு நடந்தது என்ற தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டதால், தமிழக சட்டசபையிலும் ஈழத்தில் தமிழின அழிப்பு நடந்தது என்ற தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றினார்கள்.

வடக்கு மாகாண சபையின் நிதி திரும்பிப் போனது என்று வாய்கூசாமல் சொல்பவர்கள் இலங்கையில் உள்ள மாகாண சபைகளில் வடக்கு மாகாண சபையே நிதியை திறம்படக் கையாண்டது என வழங்கப்பட்ட சான்றிதழை மறைத்ததும் மறந்ததும் ஏன் என்பது தான் தெரியவில்லை.

பொய் சொல்வதிலும் ஒரு பொருத்தம் இருக்க வேண்டும். ஆனால் அடிப்படை நீதியற்றவர்களிடம் இதனை எதிர்பார்க்க முடியாதென்பது உண்மை தான்.

இதைவிட சில உருட்டுப் புரட்டுப் பேர்வழிகள் முதலமைச்சர் கார் வாங்கியதான கதையைக் கட்டிவிடுகின்றனர். இதைவிட்ட கொடுமை வேறு என்னவாக இருக்க முடியும்.

வடக்கு மாகாண சபையில் வாகனப்பெர்மிட் எடுக்காதவர் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் என்பதே சத்தியம். இதை இருட்டடிப்புச்செய்து அவர் கார் வாங்கியதாகப் பொய்யுரைப்பவர்கள் எப்பேர்ப்பட்டவர்கள் .என்பதை எங்கள் தமிழ்மக்கள் நிச்சயம் புரிந்து கொள்வர்.

அன்புக்குரிய உறவுகளே! தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஒருமுறை யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அவர் உரையாற்றும்போது, கற்றவர்கள் கயவர்களாக இருந்தால் இந்த மண் தாங்காது என்று கூறினார். குன்றக்குடி அடிகள் அன்று கூறியது இன்று எமக்கு எத்துணை பொருத்தம் என்பதை எண்ணிப் பார்க்கிறேன்.

எது எவ்வாறாயினும் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அப்பளுக்கற்றவர் என்பது உலகத் தமிழர்களால் அங்கீகரிக்கப்பட்ட உண்மை. இந்த உண்மையை எந்தப் பிரகிருதிகளாலும் மாசுபடுத்த முடியாது.



இந்தியப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தமிழிசை தேடிச் சென்று நீதியரசருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். இந்நிகழ்வில் தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளர் தவச்செல்வம் சிற்பரனும் உடனிருந்தார்.

அண்மையில் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை உலகத் தமிழர் வம்சாவளி ஒன்று கூடல் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தருமாறு ஏற்பாட்டுக்குழு அழைத்திருந்தது.

இலங்கையின் வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் என்ற பதவி நிலையில் சென்ற நீதியரசரை தமிழகத்து ஊடகவியலாளர்கள் ஈழத்தமிழினத்தின் தலைவனாக அங்கீகரித்துக்கொண்டு ஒரு நாட்டின் அதிகாரமுள்ள தலைவனுக்குக் கொடுக்கக்கூடிய முதன்மையைக் கொடுத்தனர் என்றால், நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு சர்வதேச சமூகத்தில் இருக்கக்கூடிய உயர்ந்த மதிப்பு எத்துணை என்பதை மதிப்பிடுவதற்கு இது போதுமானதாகும்.

எம் தமிழ் இனத்தின் மிகப் பெறுமதி வாய்ந்த அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு அவர்கள் அண்மையில் தமிழ் நாட்டில் இருந்தவாறு காணொளி மூலமாக ஒரு விசேட கருத்துரையை வழங்கியிருந்தார். அதில் நீதியரசர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பொக்கிசம். அவர் தமிழினத்தின் அடையாளம். ஈழத்தமிழர்களுக்கான தலாய்லாமா என்று கூறியிருந்தார் என்றால், அதைவிட்ட மதிப்பும் கணிப்பும் வேறு எதுவாக இருக்கமுடியும்.

இவற்றையெல்லாம் நாம் கூறும்போது நீதியரசருக்காகப் பரிந்துரைக்கின்றீர்களா? என்று யாரேனும் கேட்டால் இல்லை. எங்கள் தமிழினம் வஞ்சகக் கூட்டத்தின் கரங்களுக்குள் அகப்பட்டு விட்டது. அதிலிருந்து எம் இனத்தை மீட்டெடுக்க எமக்கு நேர்மைத்தலைவன் தேவை. அந்தத் தலைவன் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனைக் கடந்து வேறு யாராகவும் இருக்க முடியாது.

அவ்வாறு இருந்தால் இக்கணமே சொல்லுங்கள். உங்கள் கருத்து நிச்சயம் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும்.

அன்புக்கினிய தமிழ் உறவுகளே! இந்த உலகம் நேர்மையானவர்களையே மதிக்கும். நீதியானவர்களையே கனம் பண்ணும். விலை போனவர்கள் தம் இனத்துக்கே கேடு இழைக்கக் கூடியவர்கள். இவர்களை எவரும் மதிக்கத் துணியார். இதுவே உண்மை.

எனவே, நாம் கேட்பதெல்லாம் தவறு விட்டவர்கள் திருந்துவதற்கும் நேர்மையானவர்கள் ஆட்சி அதிகாரங்களில் இருப்பதற்கும் சந்தர்ப்பம் கொடுங்கள். நீங்கள் கொடுக்கின்ற சந்தர்ப்பத்தால் நல்லது நடக்குமேயன்றி தீமைக்கு இடம் ஏதுமில்லை.

(தொடரும்)

புருசோத்தமன்

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்



2 10

கனகரட்ணம்
சுகாஷ்
(சட்டத்தரணி)
1

இரு தேசங்கள்..!
ஒரு நாடு..!

தமிழ் மக்களின் ஜனநாயகப் போராட்டக் களங்களில்



- 2003: யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவத் தலைவன்.
- 2005: யாழ் பல்கலைக் கழகச் சட்ட மாணவர் சங்கத்தின் முதலாவது தலைவன்.
- வித்தியா படுகொலை, ரெஜினா படுகொலை போன்ற நூற்றுக்கும் அதிகமான வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்காக முதன் முதலில் களமிறங்கியவன்.
- பயங்கவாதத் தடைச் சட்ட வழக்குகளில் சிக்கிய அப்பாவிகளுக்காகவும், கல்லுண்டாய் சூழல்மாசடைதல், சுன்னாகம் கழிவு ஒயில் பிரச்சனைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் கட்டணமின்றிக் களமிறங்கியவன்
- முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயிலில் பௌத்த பிக்குவின் உடலை எரிக்க முற்பட்டபோது சட்டப் போராட்டத்தைக் கையில் எடுத்தவன்.
- ஈழத் தமிழருக்கு நீதிகேட்டு ஐக்கிய நாடுகள் சபையில் தொடர்ச்சியாகக் குரல் கொடுப்பவன்
- காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவத்தின் வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவித்தல் போன்றவற்றிற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் ஜனநாயகப் போராட்டக் களங்களிலும் முன்னின்று செயற்படுபவன்.
- சன நெருக்கடி மிகுந்த பிரதேசங்களான கோப்பாய், மாதகல், வட்டுக்கோட்டை போன்ற பகுதிகளில் கொரோனாத் தடுப்பு மையங்களை உருவாக்கி இராணுவத்தை தனிமைப்படுத்த முற்பட்டபோது அவற்றைத் தடுத்து நிறுத்தியவன்.
- சுழிபுரத்தில் மீனவர்களின் வாடி அமைந்துள்ள கரையோரக் காணிகளை கடற்படையினர் ஆக்கிரமிக்க முற்பட்டபோது தடுத்து நிறுத்தியவன்.

(C-209)

தமிழரின் உரிமைக்காக ஐக்கிய நாடுகள் சபையில்




X 1 2 10

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி / அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

# வரலாறு கற்றுத்...

விடுத்துள்ளது.

பேரவையினால் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள விசேட அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமது தாயகம், மொழி, கலை, கலாசாரம் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றின் மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் பற்றுறுதி ஆழமானது. ஒரு தேசிய இனமாக தமிழ் மக்களின் தேசியம் சார்ந்த பற்றும் அரசியல் அறிவும் அரசியல்வாதிகளிலும் பார்க்க மேம்பட்டிருப்பதை பல சந்தர்ப்பங்களில் நாம் உணர்ந்திருக்கின்றோம்.

எமது மக்கள் தமது தாயகம், தேசியம், சுயநிர்ணயம் போன்ற அடிப்படை அபிலாசைகளுக்காகவும், அதன் பால் அவர்களுக்கிழைக்கப்பட்ட அநீதி களுக்கெதிராகவும் தன்னார்வத்துடன் பல போராட்டங் களை தொடர்ச்சியாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

குறுகிய கால அவகாசங்களில் தமிழ் மக்கள் பேரவையால் அழைப்பு விடுக்கப்பட்ட கதவடைப்பு போராட்டங்களிலும் எழுகதமிழ் போன்ற பேரணிகளிலும் உணர்வு பூர்வமாக இணைந்து தமது முழு ஆதரவினையும் வழங்கியிருந்தனர். அதே போன்று எமக்காக தம்மை அர்ப்பணித்தவர்களின் பெயரால் தேர்தல் அரசியல் கடந்து தமிழ் மக்கள் பேரவை முன்வைக்கும் சில கோரிக்கைகளையும் அனைவரும் கருத்திலெடுக்குமாறு தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

தேர்தல் அரசியலால் நாம் பிளவுபடுவதோ, குழுக்களாக பிரிந்து நின்று முரண்படுவதோ ஆரோக்கியமாகாது.

அழுத்தங்களாலும் சூழ்நிலைகளாலும் அறியாமையாலும் தடம் மாறி நிற்கும் மக்கள் நம்மவர்கள் அல்ல என்றும் ஆகிவிடாது. அவர்களினை எதிரிகளாக நாம் உருவகிக்கவும் முடியாது. அவர்களையும் தடம் மாற்றி ஒற்றுமைப்படுத்தும் பாரிய பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கின்றது.

ஒரு வலுவான கொள்கை அடிப்படையிலும் அந்த கொள்கைகளை நிறைவேற்றுவதற்கான செயற்பாட்டுத் தளத்திலும் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதை விடுத்து தங்களுக்குள் மோதிக் கொள்வதனை அனுமதிக்க முடியாது.

70 வருடங்கள் கடந்தும் தொடர்ந்து கொண்டிருக்கும் எமது துயரங்களுக்கு மேலதிகமாக தற்பொழுது மாறி வரும் அரசியல் சூழ்நிலைகளால் ஏற்படும் அழுத்தங்கள், கோவிட்-19 எனப்படுகின்ற கொரோனாத் தொற்றினால் ஏற்பட்டு வரும் பாரிய பொருளாதார சமூக அழுத்தங்கள் என்பவற்றை எதிர்கொள்வது சம்பந்தமாக பலதரப்பட்டவர்களுடனும் தொடர்ச்சியாக நாம் கலந்தாலோசித்து வருகிறோம். இந்த கலந்துரையாடல்களில் தேர்தல் அரசியல் கடந்து எமது அபிலாசைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒருங்கமைக்கப்பட்ட ஒற்றுமையான தளம் ஒன்றின் அவசியம் பலராலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இவற்றை வெற்றிகரமாக முன்னகர்த்த பொதுமக்களுடன் சேர்ந்து இயங்கக்கூடிய நேர்மையான- விலைபோகாத அரசியல் பிரதிநிதிகள் எமக்கு அவசியமாகின்றனர்.

அந்த வகையில் எமது வாக்குரிமையை சரியாகப் பயன்படுத்தி பொருத்தமானவர்களை தெரிவு செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு எம்முன்னே எழுந்திருக்கிறது.

அதற்காக பின்வரும் விடயங்களை கருத்தில் எடுக்குமாறு தமிழ் மக்கள் பேரவையானது அனைவரையும் தாழ்மையுடன் வேண்டி நிற்கிறது.

**1.** எமது அடிப்படை அரசியல் அபிலாசைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணயம் போன்றவற்றை தொடர்ச்சியாக நிராகரித்து நிற்கும் பேரினவாத கட்சிகளையும், அவற்றை தேர்தல் காலங்களில் மட்டும் உச்சரிக்கும் கட்சிகளையும், அவற்றினால் களமிறக்கப்பட்டிருக்கும் குழுக்களையும் முற்றுமுழுதாக நிராகரிப்போம். எமது வாக்குகளை தற்காலிக சலுகைகளுக்காகவும் வெகுமானங்களுக்காகவும் விற்பதை தவிர்ப்போம்.

இவ்வாறானவர்களுக்கு அளிக்கப்படும் வாக்குகள் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை பலவீனப்படுத்தி எமது இருப்பினையும் கேள்விக்குள்ளாகி விடும் என்பதனை உணர்ந்து கொள்வோம்.

**2.** எமது வாக்குகளை வீணடிப்பதற்காகவும் சிதறடிப்பதற்காகவும் திட்டமிட்டு பல குழுக்கள் களமிறக்கப்பட்டிருக்கின்றன. ஆசனங்கள் கிடைக்கும் சந்தர்ப்பம் அற்ற இக்குழுக்களுக்கு நாம் வாக்களிப்பதால் எமது வாக்குகள் விரயமாகும் என்பதை மனதில் நிறுத்துவோம்.

**3.** சிந்தித்து வாக்களிக்கக் கூடியவர்கள் வாக்களிக்கத் தவறின் பொருத்தமற்றவர்கள் எமது பிரதிநிதிகளாகும் ஆபத்து இருக்கிறது. எனவே தவறாது வாக்களிப்பதோடு மற்றவர்களையும் வாக்களிக்குமாறு ஊக்கப்படுத்துவோம்.

**4.** பொதுமக்களுடன் சேர்ந்து ஒற்றுமையாக உரிமைக்காக உழைக்கக்கூடியவர்களையும், சரியான கொள்கை நிலைப்பாட்டில் உள்ளவர்களையும் நேர்மையின் வழி நின்று மக்களுக்கு பொறுப்பு கூறக்கூடியவர்களையும் தெரிவு செய்ய தவறாது எமது வாக்குரிமையையும் மற்றும் மூன்று (03) விருப்பு வாக்குகளையும் பயன்படுத்துவோம்.

**5.** துறைசார் வல்லுனர்கள், உள்நாட்டு வெளிநாட்டு புலமையாளர்கள், பொதுமக்கள், அரசியல் கட்சிகள் என பல தரப்பினதும் பங்களிப்புடனும் தமிழ் மக்கள் பேரவையானது தெளிவான தீர்வுத் திட்ட வரைபொன்றை மக்கள் முன் வெளியிட்டிருந்தது.

இதன் அடிப்படைகளை ஏற்று பற்றுறுதியுடன் செயற்படக்கூடியவர்களை எங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்ய உறுதி கொள்வோம்.

**6.** வாக்களிப்பதுடன் எமது கடமை முடிந்து விட்டது என்று எண்ணாது தேர்தல் அரசியலுக்கு அப்பால் எமது தேசத்திற்காக, அபிலாசைகளுக்காக கலை கலாசார பொருளாதார மேம்பாட்டிற்காக ஒன்றுபட்டு உழைக்க உறுதி பூணுவோம். தெரிவு செய்யப்படும் எமது பிரதிநிதிகளை நெறிப்படுத்தி வழிப்படுத்தவும் ஆயத்தமாகுவோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# சொத்து விபரத்தை வெளியிட்டார் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

தேர்தலுக்கு முன்னர் தனது சொத்து விபரங்களை பொதுமக்களுக்கு அறிவிப்பதாக கூறியிருந்தபடி தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவற்றைப் பகிரங்கப்படுத்தி இருக்கிறார்.

இது தொடர்பில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி வெளியிட்ட அறிக்கையில்-

இதன்படி, விக்னேஸ்வரனின் உள்ளூர் வங்கிக் கணக்குகளில் மொத்தமாக ரூபா 4,424,724.24 பணமும் வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் 9,618.98 பவுண்டுகள் பணமும் 1,210.33 டொலர்கள் பணமும் இருக்கின்றன.

இவைதவிர, யாழ்ப்பாணத்திலுள்ள சண்டிலிப்பாய் இரட்டையபுலத்தில் ஒரு துண்டு காணியும், கொழும்பு 7இல் அவர் வசிக்கும் வீட்டின் மீது சீவிய உரித்தும் அவருக்கு இருக்கின்றன. இவை தவிர அவருக்கு வாகனங்களோ வேறு எந்த சொத்துக்களுமோ இல்லை.

நீதிபதியாகவும், நீதியரசராகவும் பணி புரிந்தகாலத்தில் விக்னேஸ்வரன் அவர்கள் உழைத்த பணமும் முதலமைச்சராகப் பணி ஆற்றிய காலத்தில் அவருக்குக் கிடைத்த வேதனத்தில் ஏற்பட்ட சேமிப்பும் இவற்றுள் அடங்கும்.

இதேவேளை, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி வேட்பாளர்களின் சொத்து விபரங்கள் யாவும் சேகரிக்கப்பட்டு 232, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்றும் இவற்றை பார்க்க விரும்புபவர்கள் தேர்தலின் பின்னர் முன் அனுமதியுடன் அவற்றை பார்வையிடலாம் என்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக தேர்தலில் வெற்றி பெறுபவர்களின் சொத்து விபரங்கள் மாத்திரமே பகிரங்கப்படுத்தப்படும் என்றும் சில தினங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி அறிவித்திருந்த போதிலும் நீதியரசர் விக்னேஸ்வரன் தனது சொத்து விபரங்களை தேர்தலுக்கு முன்னரேயே மக்களுக்கு பகிரங்கப்படுத்தியிருக்கிறார். (ம-3)











## விற்பனைக்கு

கன்றுத்தாச்சி மாடு
விற்பனைக்கு உண்டு
தொடர்பு (3454)
077 663 1742

## வீடு வாடகைக்கு

யாழ். நகர், K.K.S வீதி, கின்னர் லேனில் சகல தளபாட வசதிகளுடன் கூடிய புதிய வீடு கிழமை, மாத அடிப்படையில் ( குறுகிய காலத்திற்கு ) வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 285 0753

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (3395)

தொடர்பு : Tel - 077 340 5951
Email : engchelvam@gmail.com

2D-Drawing Civil &
3D-Modeling Mech
Auto CAD
LINK:077 5116320 - 071 8617972

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் அங்கத்தவரும்
சித்த மருந்தகம் - யாழ். மாநகர சபை
வைத்தியர் **துஷாந்தி** அவர்களின்
அன்புத் தந்தை
அமரர்
**மாணிக்கம் சுந்தரம்**
அவர்களின் பிரிவுத்துயரில்
பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம். (3455)

அரச சித்த வைத்திய அதிகாரிகள் சங்கம்
இலங்கை

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 1937.12.22 இறப்பு 2020.07.30

எமது பாடசாலையின் ஆசிரியை
செல்வி **சு.கௌதமி** அவர்களின்
தந்தையும் திரு.**கி.செல்வராசா**
ஆசிரியரின் மாமனாரும் ஆகிய
அமரர்
**மாணிக்கம் சுந்தரம்**
அவர்கள் 30.07.2020 அன்று
காலமான செய்தி அறிந்து
துயரடைவதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம். (3453)

பாடசாலைச் சமூகம்
யாழ்/கனகரத்தினம் மத்திய
மகா வித்தியாலயம்

## மதுச்சாலைகளை...

சாலைகளும் மூடப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டே குறித்த இரு நாட்களும் நாடு பூராகவும் உள்ள சகல மதுபான நிலையங்களும் மூடப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## வீடு திரும்பிய...

ரென உயிரிழந்த சம்பவம் வல்வெட்டித்துறை, சிதம்பரா வடக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வரதமுத்து சாமிநாதன் (வயது-58) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்று வெள்ளிக்கிழமை மதியம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு கணவனும் மனைவியும் சென்றுள்ளனர்.

அங்கு பூசை வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர் வீடு திரும்பிய நிலையில் அவருக்கு உடலில் ஏற்பட்ட மாற்றத்தையடுத்து ஊறணி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,60)

## அர்ப்பணத்தோடு...

தொடர்பாக அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளரின் ஒப்பத்துடன் வெளிவந்துள்ள குறித்த அறிக்கையில், "தமிழ் மக்களின் ஆயுத ரீதியான விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் நாம் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை எதிர்கொள்கின்றோம்.

இன்றைய நிலையில் தென்னிலங்கையில் பேரினவாத சக்திகள் பெருமளவில் உருத்திரண்டுள்ளன. இலங்கை ஒரு பௌத்த, சிங்கள தேசம் என்பதை உறுதிப்படுத்துவதில் அவை முனைந்து நிற்பது வெள்ளிடை மலையாக உள்ளது.

வடக்கிலே தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் சமய, சாதிய முரண்பாடுகளையும் போரின் பின்னான வறுமை நிலையையும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் களத்தில் காலூன்றிவிட வேண்டும் என்ற பெரு விருப்போடு தென்னிலங்கைக் கட்சிகளும் வட,கிழக்கிலுள்ள அவர்களின் முகவர்களும் களமிறங்கியுள்ளனர்.

இந்நிலையில், தமிழ் தேசிய நிலைப்பாட்டில் இருந்து செயற்படுவதாக சொல்லும் கட்சிகள், கட்சிகளுக்குள்ளான உட்பூசல்களாலும் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளாலும் பிளவுண்டு சிதறுண்டவைகளாக இத்தேர்தலை எதிர்கொள்கின்றன.

இன்றைய சூழ்நிலை பெரும் விரக்தி தருவதாக அமைந்திருப்பதால் தமிழ் மக்களாகிய நாம் தேர்தலில் ஆர்வம் காட்டாமல் ஒதுங்கிவிடவோ அல்லது சலுகைகளை பிரசாரம் செய்யும் கட்சிகள் பக்கம் சாய்ந்து விடவோ உந்தப்படலாம். அது தவறு என்பதை நாம் தெளிவாக வலியுறுத்த விரும்புகின்றோம்.

எனவே, விரக்தி மன நிலையில் இருந்து விலகி வாக்களிக்க முன்வாருங்கள். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் அர்ப்பணத்தோடு இருக்கும் கட்சிகளைத் தெரிவு செய்யுங்கள். கட்சி, எல்லைகளுக்கப்பால் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அஞ்சாமல் குரலெழுப்பக்கூடிய ஆளுமைகளை அடையாளங்கண்டு வாக்களியுங்கள்!

இதன்மூலம், தேர்தலுக்கு முன்பு எம்மால் எட்டப்பட முடியாமல் போன ஒற்றுமையை தேர்தலின் பின்னாவது செயற்படு தளத்தில் எட்டமுடியுமென்று நாம் நம்புகின்றோம்.

30 ஆண்டு கால போராட்டத்தில் நாம் இழந்தவை பெரிது. அவற்றின் கைமாறு இன்றில்லாவிட்டாலும் என்றாவது கிட்ட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்போம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கறுப்புச் சீருடை...

தேர்தல் காலத்தில் இராணுவம் முகாமகளுக்குள் முடக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் இந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இந்த கடிதத்தின் நகல்கள் பிரதமருக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் விக்னேஸ்வரன் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

(2020 ஜுலை 28) அன்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி வியப்புக்குரியது. யாழ்ப்பாணம் குருநகரில் இரவு 8 மணியளவில் நான் தேர்தல் பிரசார மேடையில் இருந்த போது, முழுக் கறுப்புச் சீருடை அணிந்த 14 இராணுவத்தினர் (கறுப்புப் பூனைகள்?) மோட்டார் சைக்கிள்களில் வண்டிக்கு இருவராக கூட்ட அரங்கிற்குள் தடதடவென்று பெரும் சத்தத்துடன் நுழைந்தனர்.

வாகன எஞ்சின்களை அலற விட்டுத் தொல்லை கொடுத்தனர். நான் புறப்படும் வரை காத்திருந்தனர்.

பிறகு என் கார் புறப்பட்ட போது 14 ஆட்களுடன் 7 மோட்டார் சைக்கிள்களுடன் என் காரைச் சுற்றிச் சுற்றி வந்தனர். கொஞ்ச நேரம் ஓரத்தில் நின்றுவிட்டு என் கார் செல்லும் பாதையில் குறுக்கிட்டனர்.

பிறகு ஒரே வரிசையில் சென்று ஒரு பக்கச் சந்தில் போய் மறைந்தனர். என் காவல் பொலிஸார் என்னுடன் காருக்குள்ளேயே இருந்தனர். இந்த இராணுவத்தினர் எனக்கு எதையாவது உணர்த்த விரும்பினார்களா என்று தெரியவில்லை.

தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் என்னைப் போன்ற வயதான ஒருவரை பிரளச் செய்து விட மாட்டா என்று போதிலும் மக்களுக்குத் தவறான செய்தியை வழங்கி வாக்களிப்பு நடைமுறையை பாதிக்கக் கூடும்.

இந்தச் சம்பவம் குறித்துப் புலனாய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன். வட மாகாணத்தில் 2020 பாராளுமன்றத் தேர்தல் இராணுவத்தின் இருப்பினால் பாதிப்பு ஏற்படாமல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெறும் என நம்புகிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## அனைவரும்...

தேர்தல் தினத்தன்று வாக்கு சாவடியில் வாக்களிப்பின் போது கொரோனா தொற்றுஏற்படகூடிய சாத்தியக்கூறு குறைவானதாகவே இருக்கும்.

அதாவது நீங்கள் வீதியில் பயணிக்கும் போதோ அல்லது தங்களுடைய அன்றாட கடமைகளை செய்யும்போதோ கொரோனா தோற்று ஏற்படுகின்ற வாய்ப்பை விட வாக்களிப்பு நிலையத்திற்குள் தொற்று ஏற்படக்கூடிய சாத்தியக் கூறு மிகவும்குறைவாகவே காணப்படுகின்றது

அத்தோடு நீங்கள் வாக்களிப்பு நிலையத்துக்குள் செல்லும் போது மாஸ்க் அணிந்து கைகளை கழுவி ஏனையோர் பாவித்த பேனைகளை பாவிக்காத வகையில் பல சுகாதார நடைமுறைகளை வாக்களிப்பு நிலையங்களில் மேற்கொண்டுள்ளோம். வீதிகளில் நடமாடும் போது ஏற்படும் தொற்றுக்குரிய வாய்ப்பினை விட வாக்களிப்பு நிலையத்தில் மிகவும் குறைவானது.

எனவே உங்களுக்குரிய வாக்களிப்பு உரிமையை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வீடு புகுந்து...

தாக்கி வாளை காட்டி அச்சுறுத்தி நகைகள் திருடப்பட்டுள்ளன. இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு சோளம் தோட்டப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலேயே குறித்த திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டின் பின்பக்கமாக சென்ற நபர்கள் வீட்டின் கதவினை உடைக்க முற்பட்டுள்ளனர்.

இதன்போது சத்தம் கேட்டு வீட்டின் குடும்பஸ்தர் வெளியில் வந்துள்ளார். இதன்போது அவரை கம்பியால் தாக்கியதுடன் வீட்டில் இருந்தவர்களை வாளை காட்டி அச்சுறுத்தியுள்ளதுடன், வீட்டில் இருந்த நகைகளையும் திருடி சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த வீட்டில் இருந்தவர்கள் அவலக் குரல் இட்டுள்ளனர். அயலவர்கள் ஓடி வந்த போதும் திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## பற்றைக்குள்...

தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் - கட்டுடை பகுதியில் உள்ள பற்றைக் காணிக்குள் கூடாரம் அமைத்து மறைந்து வாழ்ந்து வந்தநிலையில் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதுதொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது,

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் கீழான உதவிப் பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான சிறப்பு குற்றத் தடுப்புப் பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையின்போது,

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுடையில் பற்றைக் காணிக்குள் தற்காலிக கூடாரம் அமைத்து மறைந்திருந்த போது கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

கட்டுடை மற்றும் நவாலிப் பகுதிகளைச் சேர்ந்த 22 மற்றும் 26 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். (ம-3)

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 31.07.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2495
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 22 31 38 80
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 31/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0691
லக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 14 41 56 68

தன நிதானய
திகதி - 2020.07.31
சீட்டிழுப்பு இலக்கம் - 297
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 03 30 41 76

மஹஜன சம்பத
திகதி 2020/07/31
சீட்டிழுப்பு இலக்கம் 4200
ஆங்கில எழுத்து R
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 6 4 8 1 7
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 31/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 567
L 13
வெற்றி இலக்கங்கள் 11 20 36 47

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல.: 997
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.07.31
வெற்றி இலக்கங்கள் 05 07 10 18 F
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ.57,220,460/-
ரூ. 100,000/- பரிசுக்கான விசேட இலக்கம் 82341
ரூ. 5,000/- பரிசுக்கான விசேட இலக்கம் 5071

வெற்றி வாரம் 2878
வர்ணம் கரு நீலம்
திகதி 31.07.2020
வெற்றி இலக்கங்கள் 14 20 26 45 மிதுனம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 3,861,310
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 354
திகதி 31.07.2020
வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 22 23 40
விதி எண் 2
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,000,000
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

V 20 48 49 60
சீட்டிழுப்பு வாரம் 605
வர்ணம் பச்சை
திகதி 31.07 2020
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,080,795
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk




# 7ஆம் விடுதி நோயாளிக்கு...

பேரும் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை 7ஆம் விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அந்த விடுதியில் சிகிச்சை பெற்ற 76 நோயாளிகள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட னர்.

இதனடிப்படையில் வடக்கு மாகாணம் மற்றும் வெளி மாகாணங்களைச் சேர்ந்த சுமார் 76 பேர் அவர்களது வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். அவ்வாறு சுய தனிமைப் படுத்தப்பட்டவர்களில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 63 பேரும்.முல்லைத்தீவு மாவட் டத்தை சேர்ந்த 6 பேரும். கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த 2 பேரும். வவுனி யாவை சேர்ந்த 2 பேரும். புத்தளம். பொலநறுவை. குருநாகல் மாவட்டத்தை சேர்ந்த தலா ஒவ்வருவருமாக 76 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நபர் கொழும்பில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவ ருக்கு கடந்த இரண்டு நாட்களாக மேற் கொண்ட பீ.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு தொற்று இல்லை என உறுதி யாகியுள்ளது.

இதனையடுத்து அவர் வைத்திய சாலையில் இருந்து விடுவிக்கப்பட்டுள் ளார். இதனால் தொற்று நோய் தடுப்பு பிரிவினருடன் மேற்கொண்ட கலந்துரை யாடலின் அடிப்படையில் தனிமைப்படுத் தப்பட்ட 76 பேரும் விடுவிக்கப்பட்டுள்ள னர் என்றார்.

கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர். முதலிரண்டு முறை சோதனை செய்யப்பட்டபோது. தொற்று இல்லையென்றே தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-3)

***(இது தொடர்பில் முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)***

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-9624)
0768226240

கிளிநொச்சியில்

# யானை தாக்கிய விரிவுரையாளர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளி நொச்சி வளாகத்தில் கடந்த 19 ஆம் திகதி காட்டு யானை தாக்கிய நிலையில், படுகாய மடைந்த பெண் விரிவுரையாளர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

தொழில்நுட்ப பீடத்தின். பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் கற்பிக்கும் விரிவுரையாளரான கொழும்பு. களனி பகுதியைச் சேர்ந்த காயத்ரி தில்ருக்ஷி (Gayathri Dilrukshi) 32 வயதுடைய பெண் விரிவுரையாளர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.(ம-3,9)







இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.